1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 15-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு சித்திரைமாதம் 19-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## மூன்ரும் உலக மகா யுத்தம்

(சுவாமி லெத்திலியர், எஸ். ஜே.)

மீண்டும் நான் உண்மையைப் பச்சையாக எடுத்துச் சொல்லட்டுமா? இரண்டு வருஷங்களுக்குமுன் 'மூன்ரும் உலக மகாயுத்தம்' என்ற இதேதலைப்பில் நான் எனது முதல் கட்டுரையை எழுதியபோது, அதை இந்தியா, கோவா, இலங்கைப் பத்திரிகைகள் எல்லாம் வெளியிட்டுப் பிரசாரம் செய்தன. ஆயிரக்கணக்கான மக்கள் வாசித்தார்கள். சிலர் பயனடைந்தார்கள். ஆனல் பலர், ஏதோ செய்திப்பத்திரிகையைப் படிக்கும்போது வேகமாய் இங்குமங்கும் பார்த்துச்செல்வது போலப் பட்டும்படாமலும் மேலெழுந்த வாரியாகப் படித்துச் சென்ருர்கள். அத்தோடு அவர்களுக்கு முடிந்துவிட்டது எல்லாம். ஆனல்....?

பாத்திமாநாயகி தீர்க்கமாய் அறிவித்துச்சென்ற பயங்கர தண்டனை என்னவாயிற்று? அது ஆரம்பமாகிவிட்டதா? இதைப்படித்து, நீங்களே முடிவு சொல்லுங்கள். "உலகத்தைப் பழிவாங்கவிருக்கும் எனது அருமைமகனின் திருக்கரத்தை இனியும் என்னல் இழுத்துப் பிடித்துக் கொண்டிருக்க முடியாது"— பாத்திமாவில் சிறுவர் மூவரிடம் மாதாபகர்ந்தது இதுதான். அதன்பிறகு நாம் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பாதேபோனல், பாவங்களுக்குப் பரிகாரம் தேடாதேபோனல், தபம் செய்யாதேபோனல் என்னவிதமான தண்டனை ஏற்படும்என்பதையும் தெரிவித்தாள். அதாவது:

"ருஷியா தனதுதப்பறைகளை உலகமெங்கும் பரப்பும்"

இந்த ருஷியநோய் உலகெங்கும் பரவிவிட்டதா? பதில்சொல்லக் கண்ணைத் திறந்துபார்த்தால் போதும். உலகிலே எந்தத் தேசத்தில், எந்தநகரத்தில் கம்யூனிஸ்தர்கள் தங்கள்தப்பறையான போதனைகளைப் பரப்புவதற்காகத் தீவிரமாய் உழைக்காமல் இருக்கிருர்கள்?

"ருஷியா குழப்பத்தையும், புரட்சியையும் உண்டுபண்ணும்"

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் ஏற்கனவே இவைகள் நிகழ்ந்துவிட்டன. இந்தியா ஒன்றுதான் பாக்கி. மதத்தின் பெயராலும், தேசபக்தியின் பெயராலும் நடைபெற்ற கலவரங்களுக்கெல்லாம் காரணம் கம்யூனிஸ்த தூண்டுதல்தான் என்பது புலனுகிவிட்டது. இனியும் இத்தகைய விபத்துகளுக்கு இடமளிக்காவண்ணம் பொலிஸ் பகுதி விழிப்பாய்க் கவனித்து வருகிறது.

"ருஷியா யுத்தங்களைக் கிளப்பும்."

சீனவில், இந்தோனேஷியாவில், கோறியாவில், இந்தோசீனவில், தீபேத்தில்—இங்கெல்லாம் யுத்தத்திற்குக் காரணகர்த்தா யார்? அடுத்தாற்போல் குறிவைக்கப்பட்டிருக்கும் அபாக்கியநாடு எதுவோ?

"ருஷியா திருச்சபையை இம்சித்து வேதகலாபனையைக் கிளப்பும்"

எண்ணமுடிந்தால் எண்ணிப்பாருங்கள். இதுகாறும் எத்தனை ஆயிரக்கணக்கான கோவில்கள், பாடசாலைகள், மடங்கள், கத்தோலிக்க ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருக்கின்றன? எத்தனை பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன? எத்தனை தீய உபயோகத்திற்காக எடுத்தாளப்பட்டிருக்கின்றன? புடாபெஸ்றநகரிலுள்ள கோவில்கள் பலவற்றின் கதவுகளிலே "கடவுள் இல்லை, அதனல் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதப்பட்ட விளம்பரங்கள் தொங்கிக்கொண்டிருப்பதைப்பார்க்களந்தநெஞ்சு குமுருமல் இருக்கும்?

"ஆயிரக்கணக்கான குருமார், துறவிகள், விசுவாசிகள்கொடூரமாய்க் கொலைசெய்யப்படுவார்கள்—வேதசாட்சிகளாவார்கள்"

போலாந்திலும், ஹங்கேரியிலும், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கடந்தஐந்து வருடங்களிலும்பலியாகியிருக்கும் குருமாரின் தொகையே பத்தாயிரத்தை மிஞ்சிவிட்டது. கன்னியாஸ்திரீமார் தாங்கள் வசித்த மடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுப் போதியஉணவின்றி, ஆபாசமான சூழ்நிலைகளில் கூலிவேலைசெய்யும்படிவற்புறுத்தப்பட்டிருக்கிருர்கள். ஆயிரமாயிரக்கணக்கிலே விசுவாசிகளான [illegible]களும் சைபீரியாவுக்குக் கைதிகளாக அனுப்பப்பட்டிருக்கிருர்கள்— இவர்கள் மீண்டும் தங்கள் ஜன்மபூமிக்குத் திரும்பப்போவதில்லை!

"பாப்பாண்டவர் அதிக துன்பப்பட வேண்டியிருக்கும்."

இன்றையதினம் பாப்பரசர் அநுபவிக்கும் துன்பதுயரங்களுக்கு ஓர் அளவுண்டோ? திருச்சபைக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல் இடையூறுகளையும், உலகின் பலபாகங்களிலே தமது ஞானமக்கள் பட்டநுபவிக்கும் வேதனைகளையும்பற்றி ரோமைக்குச்சென்ற திருயாத்திரிகர்களிடம் பாப்பாண்டவர் தாமே

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## செபமாலையும் - சுவிசேஷமும்

(முன்தொடர்ச்சி)

### களிகூர்ந்தகாரணிக்கம் II

பிரார்த்திக்கக்கடவோம், களிகூர்ந்தசித்தப்பிரசன்ன மாதாவே! உம்முடையபந்துவான இசவேல் கர்ப்பிணியாய்இருக்கிறபோது அதிகதயாபரத்துடனே அவள்நிவாசத்துக்குப் போனவிடத்திலே மினவுதல் கேட்டு மனமகிழ்ந்தீரே! அந்த மகிழ்ச்சியைப்பார்த்து, நாங்களும் புறத்தியார்பேரிலே அதிக தயாபரமாயிருக்க எங்களுக்காகப் பிரார்த்தித்துக்கொள்ளும்.

"அந்நாட்களிலே மரியம்மாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாதேசத்திலுள்ள ஓர் பட்டணத்துக்குத் தீவிரமாய்ப்போய், சக்கரியாசுடையவீட்டில் பிரவேசித்து, எலிசபேத்தம்மாளை (இசவேல்) வாழ்த்தினுள். அப்போது சம்பவித்ததேதெனில், மரியம்மாள்சொன்ன வாழ்த்துதலை எலிசபேத்தம்மாள் கேட்டமாத்திரத்தில், அவளுடையஉதாத்திலிருந்தபிள்ளை துள்ளிற்று; எலிசபேத்தம்மாளும் இஸ்பிரீத்துசாந்துவினல் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே! உம்முடைய வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி? இதோ, நீர் வாழ்த்தினசத்தம் என்காதில் விழுந்தவுடனே, என்வயிற்றிலுள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று. அன்றியும் விசுவசித்தவளாகிய நீரே பாக்கியவதி. ஏனெனில், ஆண்டவரால் உமக்கு வசனிக்கப்பட்டவைகள் நிறைவேறும்என்ருள்.

அப்போதுமரியம்மாள் வசனித்ததாவது: என் ஆத்துமமானது ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது; என் இரட்சணியமாகியசருவேசுரனிடத்தில் என் மனமும் ஆனந்தமாய்எழும்பி மகிழ்கின்றது. ஏனெனில்,தமது அடிமையானவளுடைய தாழ்மையைக் கிருபாகடாட்சத்தோடு பார்த்தருளினர். ஆகையால் இதோ, இக்காலமுதல் எல்லாத்தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதிஎன்பார்கள். ஏனெனில், வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினர். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடையகிருபையும் தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்துநடக்கிறவர்கள்மேலிருக்கின்றது. அவர் தம்முடைய கரத்தின்வல்லமையைக் காட்டியருளினர். தங்கள்இருதயசிந்தனையில் கர்வமுள்ளவர்களைச் சிதறடித்தார். வல்லபமுடைத்தானவர்களை ஆசனத்தில்நின்று தள்ளி, தாழ்ந்தவர்களைஉயர்த்தினர். பசித்திருக்கிறவர்களை நன்மைகளினல் நிரப்பித் தனவான்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். தமதுகிருபையை நினைவுகூர்ந்து, தம்முடைய தாசனுகிய இஸ்ராயேலைப் பரிக்கிரகம்பண்ணினர். அப்படியே தமதுபிதாக்களாகிய அபிரகாமுக்கும், ஊழியுள்ள காலம் அவர்சந்ததியாருக்கும் அவர்வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார்என்ருள். பின்னும் மரியம்மாள் அவளோடு ஏறக்குறைய மூன்றுமாதம்இருந்து, தன்வீட்டுக்குத் திரும்பிப் போனுள்.

அப்படியிருக்க எலிசபேத்தம்மாளுடைய பிரசவகாலம் நிறைவேறி, அவள் ஓர் குமாரனைப் பெற்ருள். அப்போதுஆண்டவர் தமதுகிருபையை அவளிடத்தில் விளங்கச்செய்தார்என்று அவளுடையஅயலகத்தாரும் சுற்றத்தாரும்கேள்விப்பட்டு, அவளுடன்மகிழ்ந்து அவளைவாழ்த்தினர்கள்." (லூக். I. 39—58)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா நடிகையின் குடும்பம்

பிரபல சினிமாநட்சத்திரமாகிய ஜூன் ஹாவர் எனும் மாது பரிசுத்தவருடயாத்திரையாக ரோமாபுரிக்குச் சென்று மறுபடியும் அமெரிக்க ஐக்கிய தேசத்துக்குத் திரும்பியபோது இடையிலே தனது ஆகாயப் பிரயாணத்தைநிறுத்தி அயர்லாந்தில் இருதினங்கள் தங்கினள். தான் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளக் காரணராயிருந்தவர் ஓர் ஐரிஷ் குருவானவரேயாகலின் அயர்லாந்தைத் தரிசிக்கச் சந்தர்ப்பங்கிடைத்ததையிட்டுத் தான் மகிழ்ச்சியடைவதாக அவள் பத்திரிகைநிருபர்களுக்குத் தெரிவித்தாள். இற்றைக்கு ஆறுவருடங்களின்முன் இவளைத் திருச்சபையில் சேர்த்தருளிய ஐரிஷ் குருவானவர், கலிபோணியாவைச்சேர்ந்த நல்லாயர் கோவிலின் விசாரணைக்குருவரான வண. ஜேம்ஸ் மைக்கவேண் சுவாமியாரே. அதன் மேல் அவளுடைய பாட்டியார் உட்பட அவள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே கத்தோலிக்கராகிவிட்டார்கள்.

**பத்தாம் பத்திநாதர்**

பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டுந்தினம் வருகிற ஆனி மாதம் 3-ந்திகதி ஞாயிற்றுக்கிழமையெனத் திட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. இது அவர் ஞானஸ்நானம் பெற்ற வருடாந்த ஞாபகதினமாகும். வெனிஸ்நகருக்குச் சமீபமான றீயெஸி எனுமிடத்திலே 1835-ம் ஆண்டு ஆனிமாதம் 3-ந்திகதியன்று அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். "பத்தாம்பத்திநாதரின் சேனை" எனும் நாமத்துடன் இங்கிலாந்தில் இருந்துவருகின்ற ஞானச்சேனை அந்நாட்களிலே ரோமாபுரிக்கு ஓர் திருயாத்திரை நடத்துதற்கான ஆயத்தங்கள் செய்துவருகின்றது. இந்தயாத்திரைக்கோஷ்டி லண்டனிலிருந்து அடுத்த வைகாசிமாதம் 31-ந்திகதி புறப்பட்டு ரோமாபுரிபோய்ச்சேர்ந்து அங்கே ஐந்து இரவு தங்கியிருக்கும்.

**பாப்பரசர் அளித்தபேட்டிகள்**

1950-ம்ஆண்டின் பரிசுத்த வருடத்திலே 31 லட்சம் யாத்திரிகர்கள் ரோமாபுரியைத் தரிசித்திருப்பதாகப் பதிவுஇடாப்பைக் கொண்டு கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களில் நூற்றுக்குத் 97 விகிதமானோரும் ஐரோப்பியர்களே. தேவமாதாவின் மோட்சாரோபணம் விசுவாச சத்தியமாகப் பிரகடனஞ் செய்யப்பெற்ற தினமாகிய சென்ற கார்த்திகைமாதம் 1-ந்திகதியன்றே மிகப்பெருந்தொகையினராய் 2,18,409 யாத்திரிகர்கள் அந்நகரில் சமுகமாயிருந்தார்கள். அவ்வருடத்திலே பாப்பரசர் அர்ச். பேதுருவானவர் மகாலயத்திலும், காஸ்ரெல் கான்டல்போ மாளிகையிலும் 686 அந்தரங்கபேட்டிகளும், 4,895 விசேஷ பேட்டிகளும், 284 விசேஷ கோஷ்டிகளுக்குரிய பேட்டிகளும் அளித்திருக்கின்றார். இன்னும் அரசர்களுக்கும், அரசாங்க தலைவர்களுக்கும் அவர் வேறாக அளித்துள்ள பேட்டிகள் முப்பத்தாறும்.

**வடதுருவக் குருவானவர்**

கனடாவிலே வடதுருவத்தையடுத்த பகுதியில் தமது விசாரணைப்பங்கைக் கொண்டுள்ளவரும், அமலோற்பவ மரியநாயகி சபையைச் சேர்ந்தவருமான வண. பீற்றர் ஹென்றி சுவாமியார் 19 வருடங்களின் பின்னர் விடுமுறையிலே தமது ஜனன தேசமாகிய பிரான்சுக்குத் திரும்பியிருக்கிறார். இவர் திரும்பவும் தமது விசாரணைப்பங்குக்குச் செல்லும்போது ஆகாய விமானத்திலும், கடைசியாக ஐந்துதினங்களாக நாய்களால் இழுக்கப்படும் சறுக்குவண்டியிலும் பிரயாணஞ்செய்யவேண்டியவர். இவரது விசாரணையின் கீழிருக்கும் கிராமங்கள் ஒன்றுக்கொன்று 100 முதல் 150 மைல் தூரம்வரையில் உள்ளன. பதினன்கு நாய்களால் இழுக்கப்படும் சறுக்குவண்டியில்தான் இவர் அந்தக் கிராமங்களுக்குச் செல்லமுடியும். இவரது மிஷன் சிற்றாலயங்களில் ஒன்று 14 அடி அகலமும், 24 அடி நீளமுமான அர்ச். பேதுருவானவர் கோவிலாகும். இது கல்லும் களிமண்ணுங்கொண்டு கட்டப்பட்டது. இது துருவவட்டாரத்திலிருந்து வடக்கே 500 மைல் தூரத்திலுள்ள பெல்லிக்குடாவில் இருக்கிறது.

**பிரித்தானியஅரசின் பிரதிநிதி**

வத்திக்கானிடமாகப் பிரித்தானியஅரசின் புதியபிரதிநிதியாகத் திரு. வால்ற்றர் சென் கிளேயர் ரொபேட்ஸ் அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். தமக்குமுன் இப்பதவியை வகித்திருந்தவர்களில் அதிகமானோரைப்போலவே இவரும் ஓர்புரொட்டஸ்தாந்தராவர். வத்திக்கானிடமாகப் பிரித்தானிய அரசு தனதுபிரதிநிதி ஒருவரை அனுப்பிவைக்கத் தொடங்கிய (முதலாவது உலகயுத்தம் தொடங்கிய சிறிதுகாலத்தின் பின்) முதல்வருடங்களிலே பரிசுத்த ஸ்தானத்தினிடமாகக் கத்தோலிக்கரே பிரதிநிதிகளாய் அனுப்பப்பட்டுவந்தனர். ஆயினும் இந்தப்பிரதிநிதித்துவம் ஸ்திரமாக நிலைபெற்றதும் பிரித்தானியிலுள்ள கத்தோலிக்கர்அல்லாத மக்களுக்கு நம்பிக்கையூட்டும் முறையில் புரொட்டஸ்தாந்தரே நியமிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். என்றாலும் இப்பிரதிநிதிகளின்உடன்உத்தியோகஸ்தர்களாக எப்போதுமே கத்தோலிக்கர் நியமனஞ் செய்யப்பெற்று வந்திருக்கின்றனர்.

**நித்தியநகரின் பாட்டி**

"ரோமாபுரியின் பாட்டி"என அறியப்படுகின்ற சிஞ்ஞோரா மன்பெரோஸ் அம்மாள் சமீபத்திலே தனது 103-ம்வருடப் பிறந்தபெருநாளைக் கொண்டாடினள். நித்தியநகரில் வசிப்பாருள் அதிகம் விருத்தாப்பியமானதென நம்பப்படுகின்ற இப்பாட்டி சென்றபரிசுத்தவருடத்திலே யூபிலிப்பலன் அடைவதற்காக அந்நகரிலுள்ள நான்கு மகாலயங்களையும் விதிக்கப்பட்ட முறைப்படியே சந்தித்திருக்கின்றாள். வயதுசென்றும் சிறந்த மனோபலமும், ஞாபகசக்தியுமுடையவளாய் இருக்கின்றாள். 103-வது பிறந்த பெருநாளன்று பரிசுத்தபிதாவின் அந்தரங்கவிசாரணைக்காரரான மொஞ். ரொறால்தோ சுவாமியார் அவள் படுக்கையறைக்குப் பக்கமாகவுள்ள அறையொன்றிலே திவ்வியபூசை நிறைவேற்றினார். இந்தமாது தினமும் காலை 10 மணிக்கு எழுந்து மத்தியானம்வரையில்செபஞ்செய்தவண்ணமிருக்கின்றாள். அதன் மேல் மூன்று அல்லது நாலு கரண்டி ஒலிவ் எண்ணெய் அருந்துகிறாள். தனது நீடிய ஆயுளுக்கும், நல்லசுகத்துக்கும் இந்தவழக்கமே காரணமென அவள் கூறுகின்றாள்.

# கெக்கில்லே இராசன் செலுத்திய நீதி

முன்னொருகாலத்திலே கள்வர்கள் சிலர் நள்ளிரவில் ஒருவீட்டின் சுவரில் துளையிட்டு உட்சென்று களவாட முயன்றனர். அக்கள்வரில்ஒருவன் சுவரில்உள்ள துவாரத்தின்வழியாக உள்ளே நுழையுந்தருணத்தில் துவாரம் கொஞ்சம்சிறிதாக இருந்தபடியால் சுவர் தற்செயலாக இடிந்துவிழுந்தது. சுவர் இடிந்துவிழுந்ததும் கள்வன் அதனுள் அகப்பட்டு உடனே இறந்துவிட்டான். மற்றக்கள்வர்கள் தப்பியோடிக் கெக்கில்இராசனிடம் முறையிட்டனர். அரசன் அம்முறையீட்டை விசாரணை செய்தபொழுது, அக்கள்வன் இறந்ததுக்குக் காரணமாய்இருந்தவன் அவ்வீட்டுச் சொந்தக்காரனேயென்றும், அவ்வளவு எளிதாக இடிந்துவிழக்கூடியவீட்டில் அவன்வாழ்ந்திருக்கக் கூடாதென்றும் தீர்மானித்தான். உடனே தன்சேவகனைக்கூவி அந்த வீட்டுச் சொந்தக்காரனை அழைத்து வரும்படி கட்டளையிட்டான். வீட்டுச் சொந்தக்காரனும் அரசன் முன்பாக வந்து நமஸ்கரித்துநின்றான். அவன் செய்தகுற்றத்தை அரசன் எடுத்துக் கூறினன்.

"மகாராசா! தாங்கள்குறிப்பிடும் குற்றத்திற்கு நான் பாத்திரவாளியல்ல; அவ்வீட்டைக்கட்டிய கொத்தனே குற்றவாளி" என்றுசொன்னன் வீட்டுச்சொந்தக்காரன். கொத்தனை உடனே அழைத்துவரும்படி அரசன் கட்டளையிட்டான். அவன் "தர்மராசனே! அந்தக்குற்றத்துக்கு நான்பாத்திரவாளியல்ல; எனக்குச் சாந்து கலந்துதந்தவன் தண்ணீரை மிதமிஞ்சிஊற்றிக் குழைத்ததால் அப்பிழைபாடு நேர்ந்தது; எனவே, அவன்தான் குற்றவாளி"என்றான். சாந்துகுழைத்தவனைக் கூப்பிடுவித்து விசாரித்தபொழுது "ஆண்டவனே! அப்படிப்பிழைநேர்ந்தது உண்மைதான். ஆனல், அதற்குக்காரணம் நான்அந்தச்சமயத்தில் உபயோகித்த குடம்தான். அது மிக அகன்ற வாயுடையதாக இருந்ததால் மட்டாகத் தண்ணீர்ஊற்றிச் சரியான பதத்துக்குக் குழைத்துக்கொள்ள முடியாமற்போய்விட்டது"என்று விளங்கப்படுத்தினன். அக்குடம் வனைந்த குயவனைக்கூப்பிட்டு விசாரித்தபொழுது அவனும் அதற்கு ஒருதகுந்தகாரணம் உண்டென்று குறிப்பிட்டான்.

"நான்வனைந்தகுடத்துக்குப் பெரியவாய் இருந்தது உண்மைதான். மகாராசா! நான்அதை வனைந்துகொண்டிருக்கும்பொழுது, அந்தவழியாகச் சென்ற அழகியஇளமங்கையே அதற்குக்காரணம்" என்று கூறினன். "அவளுடைய ரூபலாவண்யத்தில் மயங்கி, அவளையேபார்த்தவண்ணம் குடத்தை வனைந்தபடியால், கைபிழைபாடாக அதற்குப்பெரியவாய் அமைந்துவிட்டது"என்று காரணங்காட்டினன் குயவன். உடனே அவ்வழகியமங்கையைக் கூட்டிவரும்படி கட்டளையிட்டான் அரசன். அவளும் சும்மாவிடவில்லை. "இராசாதிஇராசனே! நான்அந்தக்குயவனை மயக்கவேண்டுமென்று போகவில்லையே; நான் தட்டான்ஒருவனிடம் தங்கப்பவுண்கொடுத்து ஒரு நகைசெய்து தரும்படிசொல்லி அநேக மாதங்கள் ஆகிவிட்டன; அவனும் இன்றைக்குத்தருகிறேன், நாளைக்குத்தருகிறேனென்று தவணைபோட்டுக்கொண்டே வந்தான்; அவன் அந்த நகையைச் செய்துமுடிக்காதபடியாற்றான் கண்டுகேட்கச் சென்றேன்" என்று அவள்கூறினள்.

பின்புதட்டானை அரசன் கூப்பிடுவித்தான். தட்டானே வெறும்எலும்புந்தோலுமாகக் காணப்பட்டான். அவனுக்கு எவ்விதநியாயமும் சொல்ல முடியவில்லை. தட்டார் நகைசெய்யும்பொழுது தவணைபோடுவது சகசந்தானே. அரசன்கடைசியாகத் தட்டானே குற்றவாளியெனக்கண்டு அக்காலவழக்கப்படி அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தான். குற்றவாளியின்முதுகை ஒருகற்பாறையோடுசாத்திப் பட்டத்துயானையின் நீண்டதந்தத்தால் வயிற்றைப்பிளந்துகொல்லுவதே பழையகாலத்துவழக்கம். தட்டானும் சாவதைப்பற்றிக் கவலைப்படவில்லையென்றாலும், அதனல்அரசனுக்கு ஏற்படப்போகும்பெருநஷ்டத்தையிட்டே கவலைகொள்வதாகச் சொன்னன்.

அரசன்: அது எப்படி?

தட்டான்: அரசே! யானோ ஒரு வெருளிபோல வெறும் எலும்புந்தோலுமாக இருக்கிறேன். தங்கள் பட்டத்துயானையின் தந்தம் என்னைமிக எளிதிற் கிழித்துவிடும். ஆனல் எனக்குப்பின்னுள்ள கற்பாறையில் அதன் தந்தம்தாக்கி முறிந்துவிடும். இதன் பயனாகத் தங்கள்பட்டத்துயானை சதாகாலமும் அவலட்சணமடைந்துவிடும். அதுதான் எனதுகவலையன்றி, வேறு ஒன்றுமில்லை.

அரசன்: அப்படியா? சரிசரி! அதைஎப்படித் தவிர்க்கலாம்?

தட்டான்: ஆண்டவனே! எனது அயல்வீட்டில் கொழுத்த தம்பிஒருவன் இருக்கிறான். அவனை எனக்குப் பதிலாகக் கொண்டுவந்துநிறுத்தினல், பட்டத்துயானையின் தந்தம் ஒடியாமற் பாதுகாக்கலாம். ஆகையால் எனக்குப்பதிலாக அவனைநிறுத்தும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசன்: அதுநல்லயோசனைதான். அடேசேவகா! உடனேபோய் அந்தத்தம்பியைக் கூட்டிவா. ஒருகுற்றமும்செய்யாத அந்த ஏழைத்தம்பியை அரசன்முன்பாகக் கொண்டுவந்துநிறுத்தினன் சேவகன். அரசன்முன்னிலையில் யானை தனது கூரியதந்தத்தாற் தம்பியைக்குத்தி அவன்உயிரைப்போக்கியது. இவ்விதமாகவே கள்வன் இறப்பதற்குக் காரணமாய்இருந்தவன் அந்தக்கொழுத்த தம்பிதானெனக் கெக்கில்லராசனின் நீதிப்படி ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனையும் பெற்றான். இதன்பயனாகக் "கெக்கில்லேஇராசன் நீதி செலுத்தியதுபோல" என்றபழமொழி சிங்களநாட்டில் சர்வசாதாரணமாக வழங்குகின்றது.

— ஸ்ரீலங்கா

## நேர்த்தியின் பூர்த்தி

கோடிஅற்புதராகிய அர்ச். அந்தோனியாரது மன்றாட்டினலும், அர்ச்.பிலோமினம்மாள், அர்ச். ஆரோக்கியநாதர் சலுகையாலும் ஒன்றரைவருஷமாகக் கேட்கப்பட்ட என்மன்றாட்டுக் கிடைத்தது. அவர்களின்நாமங்கள் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ஈச்சமோட்டை E. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிசபேத் இளவரசியின்

## வத்திக்கான் தரிசனை

மாட்சிமைதங்கிய ஆறாவது ஜோர்ஜ் அரசபெருமானின் பட்டத்துக்குமாரத்தியான எலிசபேத் இளவரசியும், அவர் நாயகரான எடின்பேக்கின் டியூக் கோமகனாரும் சென்ற 13-ந்திகதி வியாழக்கிழமை வத்திக்கான் மாளிகைசென்று அங்கே பரிசுத்தபாப்பரசரைச் சந்தித்தார்களென்றும், அவர் தமது பிரத்தியேக நூல்நிலையத்திலே இராசதரிசகர்களை வரவேற்று அவர்களுடன் சம்பாஷித்தாரென்றும் தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. பதினாறாம் நூற்றாண்டிலே எட்டாவது என்றி அரசன் கத்தோலிக்கதிருச்சபையைக் கைவிட்டுத் தனது இட்டம்போல அதற்குப்புறம்பாக ஓர் புரொட்டஸ்தாந்தசபையை ஆக்கிக் கொண்டபிறகு பிரித்தானிய இராசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களிலே பாப்பரசரைச்சந்தித்த ஆறாவது ஆளாய் எலிசபேத் இளவரசி இன்று விளங்குகின்றார். பிரித்தானியதேசத்திலும், அதன் சாம்பிராச்சியநாடுகளிலும் பாப்பரசரைத் தங்கள் சமயதலைவராகக் கொண்டுள்ளோராய்க் கோடிக்கணக்கான கத்தோலிக்கமக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்ஙனமாக, ஓர்நாள் பிரித்தானியஅரசியாகச் சிம்மாசனமேறவிருக்கின்ற எலிசபேத் இளவரசி தமது நாயகருடன் வத்திக்கான்மாளிகைசென்று கத்தோலிக்கமக்களின் ஞானத்தலைவராய், அகில முழுவதுக்கும் ஓர் பொதுப்பிதாவாய், உலகஅரசர் ஒருவருக்குரிய சகலவரிசைகளுடனும் அங்கேவீற்றிருக்கின்றபரிசுத்த பாப்பரசரைச் சந்திப்பதானது, தமதுகத்தோலிக்கபிரசைகளைக் கௌரவிப்பதுபோன்றஓர் பெருமையான செயலாகுமன்றோ! ஆனால், எலிசபேத் இளவரசி ஓர் புரொட்டஸ்தாந்தராயிருக்க, அவர் பாப்பரசரைச் சந்தித்தது தகாதென ஆட்சேபித்து இங்கிலாந்திலுள்ள ஐந்து புரொட்டஸ்தாந்த சங்கங்கள் அன்றுதினம் லண்டன்நகரிலே ஓர் மகாநாடுகூடி "இளவரசி பாப்பரசரைச் சந்தித்ததையிட்டு நாம் பெரிதும் கவலைகொண்டுள்ளோம்" என்று வருத்தந்தெரிவித்துப் பக்கிக்காம் மாளிகைக்கு ஓர் தந்தி உடனே அனுப்பிவைத்தனவாம்.

பெரியசமயதலைவர் என்றமட்டிலே, பெரிய அரசியல்ஞானி என்றமட்டிலே, பெரிய பக்திமான்என்றமட்டிலே, பெரிதும்அனுபவஞானம் படைத்தவர் என்றமட்டிலே ஆங்காங்கு பலதேசங்களிலுமுள்ள பிரபலம் வாய்ந்த புரொட்டஸ்தாந்த பிரமுகர்கள்பலரும் காலந்தோறும் சென்று பாப்பரசரைத் தரிசித்து அவரை வாயாரவாழ்த்தி, மனதாரப்போற்றிக் கொண்டிருக்கும் இன்றைய உலகிலே — பிரித்தானியஅரசு வத்திக்கானிடமாகத் தனது இராசீயப் பிரதிநிதிஒருவரைக் கொண்டிருக்கும் இந்தக்காலத்திலே குறித்த ஐந்துபுரொட்டஸ்தாந்த சங்கங்களும் எலிசபேத் இளவரசியின் தரிசனையையிட்டு வருத்தந்தெரிவித்துக் கொண்டமை உள்ளபடியே வருந்தக்கூடிய ஓர்கருமமல்ல. எலிசபேத்இளவரசியின் சகோதரியான மார்கறேற் இளவரசி 1949-ம்ஆண்டு பாப்பரசரைச் சந்தித்தபோதும் இந்தவிதமான ஆட்சேபனை நடந்தது அதிசயமல்ல.

இராசீய நிபுணர்

## குருவாயினர்

பரிசுத்த ஸ்தானத்தினிடமாகவுள்ள பிரித்தானியஅரசின் பிரதிநிதி காரியாலயத்திலே முன்னர் காரியதரிசி பதவிவகித்திருந்த வண. ஹியூ எட்மன்ட் மொண்கோமெறி அவர்கள் சமீபத்திலே றோமாபுரி, அர்ச். லத்தறன் அருளப்பர் மகாலயத்திலே அங்நகர் விக்கார் ஜெனறலாகிய கருதினால் மிக்காரு ஆண்டவரால் குருத்துவ அபிஷேகஞ் செய்யப்படலாயினர். இவருக்குத் தற்போது வயசு 55. இவர் கீர்த்தி வாய்ந்த பிரித்தானிய சேனாபதியாகிய பீல்ட்மாஷல் வைக்கவுண்ட் மொண்கோமெறி அவர்களின் மைத்துனர். இவர் முதலாவது உலகயுத்தத்தில் சேவை செய்து இராணுவசிலுவை சம்மானிக்கப் பெற்றிருந்தார். அந்தயுத்தம்முடிந்ததும் இராசீயசேவையில் ஈடுபட்டுச் சுவீடன், யூகோசிலேவியா, ஜேர்மனி, துருக்கி ஆதியாம் நாடுகளிலே சேவைபுரிந்து 1933-ம் ஆண்டு முதல் 1936-ம் ஆண்டு வரையில் பரிசுத்தஸ்தானத்தினிடமாகவுள்ள பிரித்தானிய அரசின் பிரதிநிதிகாரியாலயத்தில் காரியதரிசியாகக் கடமை பார்த்தார். றோமாபுரியிலுள்ள பீடாகல்லூரியில் இவர் குருப்பட்டத்துக்குப் படித்தார்.

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில் கொண்டிருக்கும்

அர்ச். சூசைமாமுனிவர் பேரில்

# பிரார்த்தனைப் பஞ்சகம்

1. மாதவ முனியே மருமலர்க் கொடியே
    மருந்துமா மூலிகை யமுதே
ஆதுலர்க் கரசே அடைக்கல பதியே
    அடியனிவ் வாதரை தனிலே
ஆதர விழந்தேன் அருந்துய ரடைந்தேன்
    அப்பனே ஆர்க்கெடுத் துரைப்பேன்
போதவிழ் கொழும்புத் துறையுறை பதியே
    புரவலா சூசைமா முனியே.

2. என்பொரு ளெல்லா முன்பொரு ளாக
    வெடுத்தெனை யாட்கொள வேண்டும்
துன்பமே யெல்லாந் துடைத்திட வேண்டும்
    சுகமர ணந்தரல் வேண்டும்
உன்பெரும் வல்ல வடைக்கலம் வேண்டும்
    உவந்தெனைப் புரந்திடல் வேண்டும்
துன்பறு கொழும்புத் துறையுறை பதியே
    துய்யனே சூசைமா முனியே.

3. அருந்தவம் புரிந்தாய் அமலனை யணைத்தாய்
    அவர்க்கமு தூட்டிநீ வளர்த்தாய்
பெருந்துய ருழன்றாய் பிரபஞ்ச மிகந்தாய்
    பெருகுபேர் வரமெலா மடைந்தாய்
திருந்தலர்க் கரத்தோய் தீயனென் றனைநீ
    சினப்பினுஞ் சேவடி பிரியேன்
வரந்திகழ் கொழும்புத் துறையுறை பதியே
    வள்ளலே சூசைமா முனியே.

4. உன்முகஞ் சற்றே சாய்ந்திட வேண்டும்
    உன்மக னேக்கிட வேண்டும்
என்றனை யவர்க்குக் காட்டிட வேண்டும்
    என்துய ருரைத்திட வேண்டும்
நின்சனு வெனக்கு நிலைத்திடி லிந்த
    நிலமிசை பாக்கிய னவேன்
நன்னிலை கொழும்புத் துறையுறை பதியே
    நாயகா சூசைமா முனியே.

5. சஞ்சல மிகுந்த செகந்தனி லடியேன்
    சஞ்சரித் திறுதியாங் காலந்
துஞ்சியே யாவி பிரிந்திடும் வேளை
    துணையெனக் காகநீ வந்து
அஞ்சனீ யருள்வாய் அடைக்கலம் புரிவாய்
    அநந்தபே ரின்பமே யருள்வாய்
மஞ்சுயர் கொழும்புத் துறையுறை பதியே
    மாதவா சூசைமா முனியே.

இற்றைக்கு 50 வருடங்களுக்குமுந்திய அச்சுப்பிரதியிலிருந்து இது அனுவதிக்கப்பட்டுள்ளது. அப்பிரதியை நமக்கு அனுப்பிவைத்த ஆசிரியருக்கு எமது நன்றி உரித்தாகுக. —ப-ர்.

கர்த்தர் உத்தானத்தின் பின்

## 4-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16: 5—14)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இப்போது என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். ஆயினும், எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனால், நான் இவைகளை உங்களுக்கு வசனித்ததினால் துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்று. ஆயினும், நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறதே உங்களுக்கு நலமாயிருக்கின்றது. ஏனெனில், நான் போகாதிருப்பேனாகில் தேற்றுகிறவர் உங்களிடத்தில் எழுந்தருளி வரார்; ஆனால், நான் போவேனேயாகில் அவரை உங்களிடம் அனுப்புவேன். மேலும் அவர் வந்தபிறகு பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் அவர் உலகத்தைக் கண்டித்துப் பேசுவார். பாவத்தைக்குறித்து என்றேன்; ஏனெனில், அவர்கள் என்பேரில் விசுவாசம் வைக்கவில்லை. நீதியைக்குறித்து என்றேன்; ஏனெனில், நான் என் பிதாவினிடத்தில் போகிறேன். இனி என்னைக் காணமாட்டீர்கள். தீர்வையைக்குறித்து என்றேன்; ஏனெனில், இவ்வுலகத்தின் அதிபதி ஏற்கனவே தீர்வையிடப்பட்டான். உங்களுக்குச் சொல்ல இன்னும் அநேக காரியங்கள் உண்டு. ஆனால், இப்பொழுதோ அவைகளைத்தாங்க உங்களாற்கூடாது. ஆனால் சத்தியத்தின் இஸ்பிரீத்து சாந்துவானவர் வரும்போது எல்லாச்சத்தியத்தையும் உங்களுக்குப் போதிப்பார். ஏனெனில், அவர் தாமாகப் பேசுவதில்லை. ஆனால் தாம் கேட்கும் யாவையுஞ் சொல்லுவார். வருங் காரியங்களையும் உங்களுக்குஅறிவிப்பார். அவர் என்னை மகிமைப்படுத்துவார். ஏனெனில், என்னுடையதினின்று பெற்றுக்கொண்டு, அதை உங்களுக்கு அறிவிப்பார் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

# தமிழ்த் திருவிழா

தமிழ்த்திருவிழா 29-4-51, 30-4-51, 1-5-51 ஆகிய இத்திகதிகளில் நடைபெறும். தங்கள்பத்திரிகையிலே இம் மாற்றத்தைத் தயவுகூர்ந்து பிரசுரிக்கவும். விபரமான நிகழ்ச்சி நிரல் விரைவிலே அனுப்பிவைப்போம்.

இ. அரியரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

சித்திரைமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 20 | அர்ச். அஞ்ஞேசம்மாள் | (வெ) |
| சனி | 21 | அர்ச். அஞ்சேல்மர் | (வெ) |
| ஞா | 22 | கர்த். உத். பின் 4-ம் ஞாயிறு — அர்ச். சொத்தே, கையுசு | (வெ) |
| திங் | 23 | அர்ச். ஜோர்ஜியார் | (சி) |
| செ | 24 | அர்ச். சிக்மாரிங்கா பிதேலப்பர் | (சி) |
| புத | 25 | அர்ச். மாற்கு | (சி) |
| வியா | 26 | மர்செல்லினூர் | (சி) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
சித்திரைமாதம் 19-ந் திகதி


## மூன்றும் நூற்றுண்டு விழா

இலங்கை அப்போஸ்தலர் எனும் சிறப்புப்பெயரால் அறியப்படுகிறவரான ஆசா. யோசேவாஸ்முனீந்திரர்பிறந்த மூன்றும் நூற்றுண்டுவிழா நாளைகின்றுவரும் 21-ந்திகதி சனிக்கிழமை வருகிறதென்பதை அறியுமிடத்து இலங்கைக் கத்தோலிக்கமக்கள் பெரிதும் ஞானனந்தங்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. "1651-ம்ஆண்டு சித்திரைமாதம் 21-ந்திகதியன்று எனக்கு ஓர்புதல்வர் பிறந்தார்; எட்டாம்நாள் யோசெவ்எனும் நாமமிட்டு அவர் ஞானதீட்சை அருளப்பெற்றூர்; அவர்ஓர்காலம் ஓர்பெரியமனுஷராய் விளங்குவார்" என்று அவரதுதந்தையாரான கிறிஸ்தோப்பர் வாஸ் அவர்கள் தீர்க்கதரிசனமாக அப்போது கூறியிருந்தார். ஆசா. யோசேவாஸ்முனிவருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டுவிப்பதற்கான பெருமித முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே அந்தத் தீர்க்கதரிசனவாக்குகள் எமது இருதயங்களிலே பெரிதும்ஞானமனேற்சாகம் பிறப்பிக்கும்வகையிலேஎதிரொலியாய்ஒலிக்கநியாயங்கள் இல்லாமலில்லை.

ஆசா. யோசேவாஸ்முனிவர் ஓர்இந்தியர். கோவையைச்சேர்ந்த பெனேலிம்எனும் கிராமத்தில்பிறந்தவர். தமது இளமையிலே தேவபத்தியில்சிறந்து "பரிசுத்தகுழந்தை" யென்று தமதுகிராமவாசிகளால் பரிவாக அழைக்கப்பட்டுவந்தவர். தமது 25-ம்வயசிலே குருப்பட்டம்பெற்றுச்சிலகாலமாகக்கோவையிலே திருத் தொண்டாற்றிவந்தவர்.

அங்கு தொண்டாற்றிவரும்போது, பதிதரான ஒல்லாந்தர் இலங்கையிலே கத்தோலிக்கரைத்துவேஷித்துக் குரூரவேதகலாபனை நிகழ்த்திவருஞ்செய்தி அவர்செவிக்கெட்டியதே பதைபதைத்து எதுவிதமும் இங்கே கத்தோலிக்கசயத்தைப் பாதுகாத்துவைக்க வேண்டுமெனத் தணியாதஆசைகொண்டார். ஓர் அடிமையைப்போல மாறுவேடம்பூண்டார். 1687-ம்ஆண்டு யாழ்ப்பாணம்வந்து சேர்ந்தார். உடனே தமதுவேததொண்டை ஆரம்பித்தார். அப்போது விடாப்பிடியாக ஒல்லாந்தர் நடத்திய வேதகலாபனையாலே யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்கரின்நிலைமை பெரிதும் பரிதாபத்துக்குரியவிதமாய் இருந்தது. ஏனெனில், இலங்கையிலே கத்தோலிக்க சமயவழிபாடுகளை ஒல்லாந்தஅரசு கண்டிப்பாக விலக்கிப் பெருங்கட்டுப்பாடுகள் செய்திருந்தது. ஆனல், யோசேவாஸ்முனிவர் இங்குவந்து சேர்ந்த சிறிதுகாலத்துள் பெரியமாற்றம் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணத்திலே அத்துணை பெரும் வேதவைராக்கியத்துடனும், தீர்த ஆத்தும இரட்சண்ய வாஞ்சையுடனும் அவர் தேவதொண்டாற்றிவந்தமையாலே சிலவருடங்களில் ஓர் அர்ச்சியசிஷ்டர்போன்று எல்லோராலும் சங்கிக்கப்பெற்றுவந்தார். ஒன்பதுவருடகாலம் அவர்இலங்கையிலே தன்னந்தனிமையாயிருந்துகளைப்பாராது, பலவித கஷ்டங்களைப்பறுவாய்பண்ணுது ஊரூராகத்திரிந்து கத்தோலிக்கரையெல்லாம் வேதவிசுவாசத்தில் ஸ்திரப்படுத்தி எமதுநாட்டுக்கு ஓர்வேதசூரியனுக விளங்கியிருந்தார்.

பொதுவிலே கூறுமிடத்து, ஆசா. யோசேவாஸ்முனிவர் தமது உடல் பொருள் ஆவிமூன்றினையும் எமது முன்னேருக்காக அர்ப்பணஞ்செய்து, வேருடன்களையப்பட்டுப்போகும் தறுவாயிலிருந்த நமது சத்தியமறைக்குப் புத்துயிர்அளித்து, 24 வருடகாலம் அயராதுழைத்தார். தமது சபையைச்சேர்ந்த வேதபோதகர்களில் ஒருவரான யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமியாரைக்கொண்டு தமிழிலும், சிங்களத்திலும் அரியநூல்களை இயற்றுவித்து எமது நாட்டிலே வேதப்பிரசுரங்களுக்கு அடியிட்டார். தம்முடைய உயிரைத் திரணமாகத்தானும் மதியாது, இடுதண்டம் பிடிதண்டமென ஒல்லாந்தர் நடத்திய கொடியவேதகலாபனையைப் பறுவாய்செய்யாது, அத்தனை வருடகாலம் இரவுபகலாக உழைத்து, எம்வேதவிசுவாசச்சுடர்அணையாது காத்துவைத்த ஆசா. யோசேவாஸ் முனிவர் பிறந்த மூன்றும்நூற்றுண்டு விழாவின்போது அவரைநாம் விசேஷவிதமாக நினைவுகூர்ந்து, அவருக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டும்நாளைத் தீவிரிக்கச்செய்யுமாறு இறைவன் திருவருளை இரந்துகொள்வோமாக.

## சுதேச வர்த்தமானம்

### கல்லூரி ஆரம்பம்

பாஸ்குவிடுமுறை முடிந்துசம்பத்திரிசியார் கல்லூரி இம்மாசம் 23-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை ஆரம்பமாகும்.

### காவலூரும் குடிதண்ணீரும்

ஊர்காவற்றுறைப் பட்டினத்துக்கும், துறைமுகத்துக்கும் குடிதண்ணீர் உதவுதற்காக ஏழுகிணறுகளையும் தோண்டிக் குழாய்அமைக்கும் வேலையைக் கொழும்பிலுள்ள சாமுவேல் அன்சன்ஸ் கம்பெனி கையேற்று நடத்திவருகின்றது. இந்தக்கிணறுகள் பட்டினத்திலிருந்து இரண்டுமைல் தூரத்திலுள்ள நாரந்தனையிலே அர்ச். பேதுருவானவர் கோவிலுக்குச் சமீபமாகத் தோண்டப்படுகின்றன.

### வின்சென்ற் டீ போல் சபை

யாழ்ப்பாணம் சென்வின்சென்ற் டீ போல்சபைப் பந்திகளின் 1951-ம் ஆண்டிற்கான முதலாவதுகால்வருடப் பொதுக்கூட்டம் சென்ற 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் சற்பிரசாதஆசீர்வாதத்தின்பின் சஞ்சூசையப்பர்கூட்டச்சாலையில் நடந்தேறியது. அதிவண. எஸ். இம்மனுவேல் சுவாமி அவர்கள் தலைமைவகித்தனர். வழமையானசெபம், ஞானவாசினையின்பின் சஞ்சூசையப்பர், சந்தியோகுமையோர், பரலோகமாதா, உத்தரியமாதாபந்திகள் தத்தம்அறிக்கையையும் கணக்கையும் முறையே சமர்ப்பித்தன. குறிப்புரையின்பொழுது தனிச்சங்ககாரியதரிசி திரு. P. சவிரிமுத்துஅவர்கள் பந்திகள்கடன்பட்டுத் தங்கள்தருமவேலையைச் செய்யவேண்டிய அவசியமில்லையென்றும், அப்படிக் கடன் தேவையாகில் தனிச்சங்கத்திடம் பொருளுதவிக்கு விண்ணப்பபத்திரங்கள் அனுப்பி வேண்டியஉதவியைப் பெறும்படியும் கூறினர். அதன்பின் அக்கிராசனர் தருமத்தின் மகத்துவத்தையும், தருமஞ்செய்தல் எல்லோருக்கும் கடமைஎன்பதையும் மிகவிரிவாய் விளக்கினர். திரு. எல். ஜே. கிறேசியன் அவர்கள் உபந்நியாசகருக்குக் கூறியநன்றித்துதியுடன் கூட்டம் இனிதேநிறைந்தது.

### உணவுக் கப்பல்கள்

கொழும்புத்துறைமுகத்திலே சென்ற சனிக்கிழமை பதினுன்கு உணவுக்கப்பல்கள் ஏககாலத்தில் வந்துநின்றன. இவற்றில்ஒன்பதுகப்பல்கள் சுமார் ஏழுலட்சம்தொன் அரிசிமூடைகளைக் கொண்டுவந்தன. வேறிரண்டு உணவுக்கப்பல்கள் 1,300 தொன் உருளைக்கிழங்கு ஏற்றிக்கொண்டுவந்திருந்தன. மற்றோர் கப்பலிலிருந்து சீனியும், இன்னோர் கப்பலிலிருந்து வெங்காயமும் இறக்கப்படலாயின. அதனல் குதங்களிலே இடம்போதாமல் பெரும்நெருக்கடி ஏற்படலாயிற்று.

### இரண்டாவது பாஷை

சுவபாஷா கல்வித்திட்டத்திலே ஓர் பிரதானமாற்றம் 1953-ம்ஆண்டு மார்கழிமாதம் நடைமுறைக்கு வரவிருக்கின்றது. அப்போது சுவபாஷா சிரேஷ்டபாடசாலைத் தராதரப்பத்திர பரீட்சையெடுக்கும் மாணவர்களெல்லாம் இரண்டாவதுபாஷையில் சித்தியடையவேண்டியோராவார்கள். அப்போது இந்தஇரண்டாவதுபாஷை கட்டாயபாடமாகக் கொள்ளப்படும். அதாவது சிங்களப்பரீட்சையெடுக்கும் மாணவர்களெல்லாம் ஆங்கிலத்தில் அல்லது தமிழிலும், தமிழ்ப்பரீட்சையெடுக்கும் மாணவர்களெல்லாம் ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்திலும் சித்தியடையவேண்டியோராவார்கள்.

### அரைப்படி அரிசி

வழமையானகூப்பன் அரிசியுடன் இவ்வாரத்திலும், அடுத்தவாரத்திலும் மேலதிகமாக ஒவ்வோர்கூப்பனுக்கும் வகுப்புப்பேதமில்லாது அரைப்படி அரிசிகொடுக்க அரசினர் ஒழுங்குபண்ணியிருக்கின்றனர். இந்த அரிசியின் விலை படிஒன்று 60 சதமாகும்.

### கயிற்றுத்தொழிலும் கூடையும்

ஊர்காவற்றுறைச் சமூகசேவாசங்க ஆதரவின்கீழ் தற்போது அங்கே தென்னந்தும்பிலிருந்து கயிறுதிரிக்கும் தொழிலும், வெங்காயக் கூடைகள் முடையுந்தொழிலும் நடைபெற்றுவருகின்றன. இத்தொழில்களில் கையிடுவாரின்தொகையும் அதிகரித்துவருகின்றது. இச்சமூகசேவாசங்கத்தை ஆரம்பிக்கவும், அவ்விதம்ஆரம்பித்த இருவாரங்களுக்கிடையில் கயிறுதிரிக்குந்தொழிலைத் தொடக்கவும் காரணமாய் நின்றுமுயற்சித்தவர், ஊர்காவற்றுறைக் கட்டளைக்குருவான வண. [illegible] சுவாமியாரேயாம்.

## மரியாயின்சேனை
## அகில இலங்கை மகாநாடு

மருதமடுச் செபமாலைநாயகியின் திருக்ஷேத்திரமானது இலங்கையிலுள்ள மரியாயின் சேனையின் முதலாவது அகில இலங்கைமகாநாடு நடந்தேறும் தலமாய் விளங்கவிருக்கிறது. "வெசாக்" விடுமுறைநாட்களைப் பயன்படுத்தி நிகழும் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 20-ந் திகதி முதல் 22-ந்திகதி வரையிலே மூன்றுதினங்களாக நடைபெறவிருக்கும் இந்தமகாநாடு பிரதம காரியஅங்கத்தவரான சேனையாளர்களுக்கென்றே பிரதானமாகக் கூட்டப்படவிருக்கின்றது.

இலங்கையிலுள்ள மரியாயின் சேனையானது, டபிளின் நகரிலுள்ள கன்சிலியமாகிய சேனைப் பிரதமசங்கத்தின் உத்தியோகபூர்வமான பிரதிநிதி ஒருவரை மகாநாட்டில் வரவேற்கவிருப்பதாலே விசேஷஅதிர்ஷ்டவசமுடையதாகின்றது. இந்தியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை ஆதியநாடுகளுக்குச் சேனையின் பிரதிநிதியான திரு. பீற்றர் நோர்மன் அவர்கள் அதிகம் விசேஷப்பட்ட வாதவிவாதங்களைத் தலைமைவகித்து நடத்துவார்.

ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் சமத்துவமான கூட்டங்கள் நடைபெறுமாதலால் சேனையாளர் ஒவ்வொருவரும் பூரணமாகக்கலந்து, மகாநாட்டினல் கூடியபலன் அடையக்கூடியோராவார்கள். சேனையின் சுபாவப்போக்கையும், மேலான கருத்துகளையும், அப்போஸ்தலிக்க முறையையும் அதன் அங்கத்தவர்களும், உத்தியோகஸ்தர்களும், ஞானவிசாரணைத் தலைவர்களும் கண்டறியச்செய்வதையே இம்மகாநாடு தனதுநோக்கமாகக் கொண்டுள்ளது.

தேவமாதாவின் பத்தியை ஆதாரமாகக்கொண்டு மரியாயின்சேனை அங்கத்தவர்கள் தங்களையே பரிசுத்தமாக்கிக்கொள்வதாகிய அதன் முதன்மையும் முக்கியமுமான நோக்கமும் "உண்மையான பக்தி" விஷயமாய் அர்ச். லூயிஸ் மரியே மொண்பொர்த அவர்கள் எழுதிய நூல்பற்றியஆராய்ச்சியும் நிகழ்ச்சிநிரலிலே விசேஷப்பட்ட இடம்பெறும்.

இந்தமகாநாடு மருதமடுத் திருப்பதிக்கு யாத்திரைசெய்யும் ஓர்நல்ல சந்தர்ப்பத்தை அளிப்பதாயும், ஓர் 'ரோச்லைற்' சுற்றுப் பிரகாரத்தையும், மற்றும் பக்தி முயற்சிகளையும் அடக்கியதாயும் இருக்கும்.

இலங்கையிலுள்ள செனத்துஸ் சபையானது மருதமடுத்திருப்பதிப்பரிபாலனரின் உதவியோடு இலங்கை மரியாயின்சேனையின் முதலாவது பெரியசமாகமம் எல்லாவழியாலும் அனுகூலமடைந்து, அத்தாலே மேற்றிராணிமாரின் அப்போஸ்தல தொண்டிலே அதிகம் பூரணமாகப் பங்குபற்றுமாறு சேனை அதிகம்சிறந்தவகையில் அணிவகுக்கப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குருமணி A. S. யோசேப் O. M. I., B.A., Dip.-in.-Ed. அவர்கள்

# மரண நினைவு

— அழுது —

1

பாலைவனப் பசுந்தரையே! யோசேப் தந்தாய்!
பலகாலும் ஊர்காவல் துறையில் வாழ்வோர்
ஓலமிட்டு அழுதகுரல் கேட்டுக் கேட்டு
உள்ளமெலாம் புண்ணாகப் போன தையோ!
சோலையிலே புள்ளினங்கள் ஆடிப் பாடிச்
சுகமாக வாழ்ந்ததுபோல் இருந்த பாலர்
ஆலையிலே கரும்புபட்ட துயரைப் பட்டும்
ஆறுவதைக் காணேமே ஆண்டு மூன்றாய்

2

முல்லைமொட்டுக் கோத்ததுபோல் சிரிப்பை எண்ணி,
முழுமதிபோல் முகமெண்ணி, முதன்மை எண்ணி,
எல்லையற்ற தேன்மொழிகள் எண்ணி, எண்ணி,
இதயத்தின் கனிவெண்ணி, துறவி ஞானம்
வல்லஉன தருள்எண்ணி, கொலம்பகத்தை
வளர்பிறையாய் வளர்த்ததையும் மனதில் எண்ணி,
நல்லமனச் சந்திரனே மோட்ச வீட்டில்
நாதனுமக் கிடமருள இரக்கின் றேமே

3

தூயதிரு மாமரியாள் கரத்தில் தாங்கச்
சோபனஞ்சொல் வானிடர்கள் துதிகள்கூற
நேயமுடன் யேசுபரன் கருணை காட்ட
நீரந்தப் பேரின்ப உலகில் வாழ்வீர்!
காயமுடன் மனமொழியால் அடியேம் அந்தக்
கருண்யத் தனிமுதலை இரந்தோம் என்றும்
தீயர்களைப் பொன்னடியில் திருப்பும் தேவன்
திருக்குருவை அணைக்கானே செப்புவீரே!

---

## பரிசுத்தவருட வினாவிடைகள்

(முன்தொடர்ச்சி)

10. நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் யாதும் விசேஷ ஒழுங்குஅல்லது விதம் விதிக்கப்பட்டிருக்கின்றதா?

ஒழுங்கு: எவ்வித விசேஷ ஒழுங்கும் கற்பிக்கப்படவில்லை. அதாவது, பூரிவிப்பலன் அடைவதற்கு அவசியமான பாவசங்கீர்த்தனத்தையோ, திவ்விய நன்மை பெறுவதையோ, குறித்தகோவில்களின் சந்திப்புக்கு முன்னே, சிலசந்திப்புகளுக்கு அல்லது எல்லாசசந்திப்புக்களுக்கும் பின்னே நிறைவேற்றலாம்.

ஒருகாரியமமாத்திரம்முக்கியமும், அவசியமுமாயிருக்கிறது. அதாவது, குறிக்கப்பட்ட கிரியைகளிற் கடைசிக்கிரியையை (இது திவ்வியநன்மை பெறுவதாயும் இருக்கலாம்) நிறைவேற்றும்போது வரப்பிரசாதநிலைமையில் ஆத்துமம் இருக்கவேண்டும்.

ஆகையால், ஒருவர் பூரிவிப்பலன் அடைவதற்காகப் பாவசங்கீர்த்தனம் செய்தபின் மற்றக்கிரியைகளிற் கடைசிக் கிரியைக்கு முன் ஓர் சாவானபாவத்தில்விழ நேரிடுமாகில், அவர் இந்தப் பலனடைவதற்கு அவசியமான திவ்வியநன்மையை இன்னும் பெற்றுக் கொள்ளாவிடில் இன்னொருமுறை பாவசங்கீர்த்தனம்செய்யவேண்டும். திவ்வியநன்மையையும் பெற்றிருப்பாரேயாகில், உத்தம மனஸ்தாபத்தினால் தேவனுடன் சமாதானமாகுவாராக. இது பலனடைவதற்குப் போதியதாகும்.

விதம்: செபங்கள் மனச்செபமாகமாத்திரமல்ல, வாய்ச்செபமாகவும் இருக்கவேண்டும; கோவில்களைச் சந்தித்தல் பக்தியும், ஆசாரமும் உள்ளதாக இருக்கவேண்டும்; தேவனைமகிமைப்படுத்தும் கருத்துடன் செய்யப்படவேண்டும்; இந்தக்கருத்து வெளி ஆசாரத்தாற் காட்டப்படவேண்டும்.

---

### வேலைகாரச்சிறுமிக்குத் தருநாம்

அனுராசபுரத்திலே ஓர் பொலிஸ்காரனின் மனைவியான டிங்கிகாமி எனும் பெண் எட்டுவயசுடைய லீசா எனும் வேலைகாரச் சிறுமியைக் கொடுமையாக நடத்திவந்து அகப்பட்டுச் சென்ற வியாழக்கிழமை அனுராசபுர நீதிஸ்தலத்திலே குற்றவாளியாகி மூன்று மாதச் சிறைத்தண்டனையும், 100 ரூபா அபாரதமும் விதிக்கப்பட்டிருக்கின்றாள். பிரம்பினால்அடித்த காரணமாகச் சிறுமியின் உடலிலே பதினொரு காயங்கள் இருந்ததாகவும், அவளைச் சோதனை செய்தபோது தேடுவாரற்றுக் கைவிடப்பட்ட ஓர் பெண்பிள்ளைபோல் அவள் காணப்பட்டதாகவும் விசாரணையின்போது டக்டர் தெரிவித்தனர். நட்டலையைச்சேர்ந்த ஹப்புவா எனும் கிராமவாசிஒருவன் சாட்சிகூறியபோது, எதிரியுடைய கணவனது கேள்வியின்பேரிலே தான் அந்தச்சிறுமியைக் கொண்டுவந்துவிட்டதாகவும், எதிரியைத் தான்வந்து கண்டபோதெல்லாம் தனக்கு 50 சதம் வரையில் தான் கொடுத்துவந்ததாகவும், சிறுமியின் பெற்றார் இறந்துவிட்டதாகவும் தெரிவித்[illegible] அவனை நோக்கி: 50 சதத்துக்கு அச்சிறுமியை விற்றிருக்கின்ற ஓர் ஈனவிரக்கமற்ற மனிதன் நீ; அந்தப்பணத்தை நீ செலவுசெய்வது அச்சிறுமியின் இரத்தத்தையே குடிப்பதுபோன்ற செயலாகும்; நீ ஓர் மனுத்தன்மையுடையவனல்ல எனக்கூறினின்றார்.

### வான்வண்டி விபத்து

கேகாலையிலிருந்து சென்றவியாழக்கிழமை பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பைநோக்கிச் சென்ற வான் ஒன்று கான்வல எனும் கிராமத்திலே ஓர் முடக்கால் திரும்பியபோது வீதியைவிட்டுவிலகி ஓர் அணையின் மேலாய்ச்சென்று குடைசரிந்தகாரணமாக அதிலே பிரயாணஞ்செய்தவர்களில் ஒருவர் உயிர்துறந்தனர். இரு பெண்களும், இருகுழந்தைகளும் உட்படப் பன்னிருவர் காயமடைந்தனர். கால்வாரின் நிலைமை அபாயத்துக்கிடமா[illegible]ாகச் சொல்லப்படுகிறது.

---

## ON "PATRON SAINTS"

*( Chevalier S. Arulanantham )*

I have read with much profit and pleasure "PATRON SAINTS", written by Mr. John M. Seneveratna, M. B. E. I do not say that the work is a "Book of the Century", but it is such a useful little book, and should be found in the Library of every Christian Home, that loves these our "Changeless friends"—the Saints of God. The book leads us to them, and *that* I think is its greatest merit. For, to have saints for friends, is to have friends indeed. Permit me to expatiate a bit on it, as the book compells me to talk.

One of the severest trials that assail men, as they grow old is to be tempted to shelve for good, the faith they have in their fellow-men, the first step to becoming a sorry misanthrope. "It often happens, that men when they reach an advanced age have the sensation of being cast by the waters of life high and dry on a barren lonely and loveless strand." All faith in humanity is lost, till they bitterly echo the sentiment of the French cynic "The more I know of men the better I love my dog". The surest cure for such a sad state of mind is, to go to the Saints. Even such a master intellect as Cardinal Newman's, had to combat that severe trial. But he overcame it, because he says "Were it not for the Saints, I might despair of my fellow-men." These were the thoughts, that stirred my mind after I read the book "Patron Saints and other heavenly helpers in human troubles", written by the Author named above. It has a highly laudatory preface by His Excellency Mgr. E. Vagnozzi, Envoy Extraordinary of the Holy sea, to Ceylon in 1948.

A cursory glance might give the impression that the book reads like a catalogue of the lives of Notable Patron Saints, but a careful perusal leaves quite a different impression.

The book has an excellent index, giving the Patron Saints of occupations, professions, trades; also names of Saints whose special help is sought when men are afflicted with different forms of illness and troubles. Extremely useful notes are given about every one of them and their particular field of intercession.

To me—to put it in one word—the book is inspiring, because it makes one think and reflect and feel happy and derive consolation from the precious heritage, that Christ has given to His church, in His Saints. "No friends! and Oh! so lonely!," What? With the myriads of Saints in Heaven, a Catholic has absolutely no reason to feel alone and abandoned.

Permit me to end this all too brief review, with the following glowing words from Karl Adam:—Communion of Saints..............What a glad and Blessed light illumines it! It is the hidden treasure, the secret joy of the Catholic. When he thinks of it.........he passes out of the solitariness of here and there, of yesterday and tomorrow of "I" and "Thou"..........There are no limitations of space and time. From out of the remote ages of the past, from civilisations and countries, of which the memory is now only faintly echoed in legend, the Saints pass into his presence and call him brother and then gladly enfold him with their Love. **The Catholic Is Never Alone.** Let me add "**Take and read.**"

---

### அர்ச். சூசையப்பரின்

## அடைக்கலத் திருநாள்

கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத் தாபனத்தில் நிகழும் சித்திரைமாதம் 29-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பத்திச்சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந்தரும்படி அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

#### நிகழ்ச்சிகள்

**28-4-51** சனிக்கிழமை
மாலை 7-00 மணிக்கு மாலை ஆராதனை.

**29-4-51** ஞாயிற்றுக்கிழமை
காலை 7-00 மணிக்கு பாடற்பூசை.
காலை 11-00 மணிக்குப் பழையமாணவர் சங்கவருடாந்தபொதுக்கூட்டம்.
மாலை 4-30 மணிக்கு மாலை ஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்

தாபனத்தலைவர்

கொழும்புத்துறை
18-4-51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுவின் திருமுகச் சாயல்

*(By Very Rev. Father M. Motha Vaz)*

பிலாத்தூஸ், குற்றமற்றயேசுவைச் சிலுவையில் அறைந்துகொல்லத் தீர்ப்பிட்டான். இரத்தவெறிகொண்ட ஓநாய்கள்போல் காத்திருந்தயூதர்கள் திருப்தியடைந்தார்கள். கொடிய வேலையைச் செய்துமுடிக்கும்படி துரிதப்படுத்தினர்கள். அதன்பலனுக யேசு சிலுவையைச் சுமந்துகொண்டு கல்வாரிமலைக்குச்செல்கிறார். பாரமான சிலுவை, தூரமானபாதை. கஷ்டத்துடன்நடக்கிறர். பலமிழந்தசரீரம் சக்திகுன்றிப் பன்முறை தரையில் வீழ்ந்தது. அவரது உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரையில் வியர்வை வழிந்தோடுகிறது. அவரதுவதனம் வாடிவதங்கித் தூசியாலும் வியர்வையாலும் நிறைந்திருக்கின்றது. இந்தப் பரிதாபகோலத்தில் நடந்துசெல்லும் காட்சியைக்காணக் கும்பல்கும்பலாக ஆடவரும் பெண்டீரும் வழிநெடுக நிற்கின்றார்கள். சிலர் கேவலமாகஎண்ணுகின்றனர். ஆனல், பெரும்பாலார் பரிதாபப்படுகின்றனர். அவர்மாட்டு இரக்கமும் அனுதாபமுங்கொண்ட, மனேதைரியம்பூண்ட மாதொருத்தி அவருக்கு உதவிபுரியத் துணிந்தாள். நடந்தாள்அவரண்டை. எடுத்தாள் தனது துவாலையை. துடைத்தாள் அவர்முகத்தை. ஒருபாத்திரம் பச்சைத்தண்ணீர் தமதுபெயரால் கொடுத்தால் நூறுமடங்கு சம்பாவனையளிப்பதாகச் செப்பியஈசன் அவளது அனுதாபக்கிரிகைக்குப் பதிலாகத் தமது முகரூபத்தை அத்துவாலையில் பதியச்செய்தார். கண்டாள் அற்புதம், கொண்டாள் ஆச்சரியம். அத்துவாலையானது அன்றுமுதல் அவளது மரணமட்டும் விலைமதிக்கப்படாத பொக்கிஷமாகவும், இணைபிரியாத தோழன்போலும் இருந்தது ஆச்சரியமா?

இந்த அதிர்ஷ்டவதி வெரொணிக்கா என்று பரம்பரையாக அழைக்கப்பட்டு வருகின்றாள். ஆனல், அவளது முதற்பெயர் மேரி வெனிசியன் அல்லது மேரி எஜிப்தியென்என்று பழைய காலத்துப்பிரதிகளில் கண்டுள்ளதாம். திருமுகச்சாயலை— வேரா-இக்கோன், உண்மையான சாயல் — என்று சனங்கள் அழைத்துவந்ததிலிருந்து சாயல் அடங்கியதுவாலையை வைத்திருந்த பெண்மகளுக்கு வெரொணிக்காஎன்று பெயர் வந்ததென்பது பண்டைக்காலக்கூற்று. ஆனல் இப்போது அவள் பெயர் வெரோணிக்காவென்று வழங்கிவருகிறது சரித்திரம். திருமுகச் சாயலின் சரிதையை மத்தியயுகத்தில் பல பாஷைகளிலே எழுதி வெளியிட்டுள்ளனர். ஒன்றுக்கொன்று சிறுவிஷயங்களில் வித்தியாசமாயிருப்பினும் முக்கியஅம்சங்களில் ஒரே விதமாகவே அவைகள் இருக்கின்றன. கத்தோலிக்கநாடுகளில் திருமுகப்பக்தி எங்கும் பரவியிருந்ததென்றும் தெரியவருகின்றது. இந்தத்துவாலை ரோமாபுரியில் பூச்சியமாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது. ரோமைநகருக்கு அது வந்ததெப்படி?

ரோமாபுரியின் சக்கரவர்த்தி திபேரியஸ் கடும் நோயால் வருந்துகிறான். தேர்ந்தவைத்தியர்கள் சிகிச்சைசெய்தும், பலவித மருந்துகள்அருந்தியும் அவன் குணப்படவில்லை. அதற்கு மாறுக அவனுக்குக் குஷ்டரோகம் வந்துள்ளதுஎன்று வைத்தியர்கள் அறைந்தனர். சொல்லொண்ணுக் கஸ்தி அடைந்தான். கிலிபிடித்தது. எவற்றுலும்தேற்றப்படாது மனம்வாடினன். இவ்வித அல்லல்கள்மத்தியில் அவனது நண்பர் தீத்தூஸும், வெஸ்பஸியானும் அவனுக்குச்சொல்லியிருந்த யேசுவின் விர்த்தாந்தம் ஞாபகத்திற்கு வந்தது. யூதேயாவில் யேசு பல தடவைகளில் பற்பலவியாதிகளைக் குணப்படுத்தியுள்ளார். அவர் வைத்தியமுறையில் தேர்ந்தவராயிருக்கவேண்டும். ஆகையால், அவரை ரோமாபுரிக்குவரவழைப்பேன். அவர்என்னைச் சுத்தமாக்குவார் என்று மனப்பால்குடித்தான். இந்த அற்புதவராத்தரை எவ்விதமாயினுங் கொண்டுவருவான்வேண்டிப் பிரமாணிக்கமுள்ள ஓர்தூதனை யூதேயாவுக்குஅனுப்பினன். அவனும் தாமதியாது பயணம்புறப்பட்டு ஜெருசலேம்வந்துற்றான். ஆங்கு கவர்னர் பதவிவகித்துவந்த பிலாத்தூசினிடம் சக்கரவர்த்தியின் கட்டளையைச் சமர்ப்பித்து யேசுவைத் தன்னேடுஅனுப்பிவைக்குமாறு வேண்டினன். இது செய்திகேட்ட பிலாத்தூசின் முகம் வாடியது. கண்கலங்கியது. மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு "சக்கரவர்த்திக்காகத் தேடிவந்தயேசு உயிரோடு இல்லையே; யூதர்கள் அவரைச் சிலுவையிலறைந்து கொலைசெய்து விட்டனர்" என்று ஏக்கத்துடன் தூதனிடங் கூறினன். இதைக்கேட்ட தூதன் ஏமாந்துபோனன். தேடிவந்தமருந்து கைக்கெட்டவில்லையே என்று கவலைகொண்டான்.

ரோமைநகர் திரும்புமுன் சிலநாட்கள் ஜெருசலேமில் தங்கியிருக்குங்கால் யேசுவினுடைய வஸ்திரத்தின் விளிம்பைமட்டுந்தொட்ட பெரும்பாடுள்ளஸ்திரீ குணமடைந்த அற்புதச்செயலை அறியவந்தான். அவளைக் கண்டு விபரமறியஆசித்தான். ஆகவே, பானேயாஸ்எனும் கிராமத்தில் வசித்துவந்த அந்தமாதைத் தேடிப்பிடித்தான். அவள் குணமடைந்த விர்த்தாந்தத்தை விளம்புமாறு மன்றுடினன். அவள் தான் யேசுவின்கிருபையால் சுகமடைந்தவிஷயத்தை மட்டுமன்றி, அவர் தனக்களித்த ஓர்பெருஞ்சகாயத்தையும், தனக்கெய்திய கிடைக்கப்பெருத மகிமையையும் அதாவது தான் துடைக்கக்கொடுத்த துவாலையில் அவரது திருமுகச்சாயல் பதிந்ததையும் பற்றி விபரமாய்க் கூறினள். இந்த வரலாற்றைக்கேட்ட தூதன், தான் தேடிவந்தயேசுவைக் கொண்டுபோக முடியாவிடினும் அவரது முகச்சாயலையும், அதைவைத்திருந்த மாதையும் அழைத்துச்செல்லத் தீர்மானித்தான். அவளும் அதற்குச் சம்மதிக்க, இருவரும் ரோமாபுரிக்குப் புறப்பட்டார்கள்.

சக்கரவர்த்தியோ, யூதேயாவுக்குப் போன தூதனின்வருகையை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றான். ஒருநாள்போவது ஒருயுகம் போலிருந்தது அவனுக்கு. கடைசியாகத் தூதன் வந்துவிட்டானெனக் கேட்டதும் அவனடைந்த சந்தோஷத்திற்களவில்லை. உடனே யேசுவையும், தூதனையும் தன்முன் கொண்டுவரக் கட்டளையிட்டான். யூதேயாவிலிருந்து வந்தவர்கள் அவன்முன் வந்துநின்றார்கள். பார்த்தான் ஏறெடுத்து. ஏமாந்துபோனன். தூதனேடு நிற்பது ஓர் ஸ்திரீயே. "என்ன விபரீதமிது" எனக் கோபத்துடன் வினவினன். தூதன் விஷயத்தைச் சவிஸ்தாரமாக நவின்றான். பின்னும் தொடர்ந்து, "சக்கரவர்த்தியே! யேசு இங்குவராவிடினும் அவருடையமுகச்சாயல் இங்கு வந்திருக்கின்றது. அதனைத் தேவரீர் நல்மனதுடன் உற்றுப்பாருங்கள்" என்று வேண்டினன். வெரோணிக்கா தன் வசமிருந்த துவாலையைஎடுத்து விரித்துக்காட்டினள். சக்கரவர்த்தியோ ஏறெடுத்துப்பார்த்தான். மனதிற்குள் தான் சொஸ்தமடையவேண்டுமென மன்றுடினன். அவனுடைய வியாதியும் அக்ஷணமே குணமாகியது.


"மத்தியயுகத்தில் ரோமையின் சரிதை" எனும் புஸ்தகத்தில் வெரோணிக்காவின் துவாலையும் இடம் பெற்றிருக்கின்றது. அப்புஸ்தகத்தை இயற்றிய கிரகோரோவியுஸ் சொல்வதாவது: "[illegible] வியாதியினின்று குணமடைந்தபின், வெரோணிக்கா ரோமாபுரியிலேயே தங்கிவிட்டாள். திருமுகச் சாயல் கொண்ட துவாலையும் அவளிடமே இருந்தது. நூறுவதுவயதில் அவள் மரணமானுள். அவள்மரித்தபின் தூய துவாலையானது கிளமெந்து மேற்றிராணியாரிடம் கொடுக்கப்பட்டது" என்பதே. ஏழாவது பொனிப்பாஸ் பாப்பானவர்காலத்தில், வேறு அர்ச்சியசிஷ்டபண்டங்களோடு ஓர் பொது இடத்தில் அது பூச்சியமாக வைக்கப்பட்டது. 707-ம் ஆண்டு பாப்புவாம் 7-வது அருளப்பர் ஓர் பளிங்குப் பேழையில் அத்தூயதுவாலையைச் சேமித்து அர்ச். இராயப்பர் ஆலயத்தில் வைத்திருந்தார். அதற்குப்பின் இஸ்பிரீத்துசாந்துவின்கோவிலில்ஸ்தாபித்துவைக்கப்பட்டதாம். அப்போது ஆறு ரோமைப்பிரபுக்கள் அதைப் பாதுகாத்துக் காப்பாற்றிவந்தார்கள். அதைவைத்திருந்த பளிங்குப் பாத்திரத்திற்கு ஆறுபூட்டுகள். ஒவ்வொரு பிரபுவும் ஒவ்வொருசாவியை வைத்திருந்தார்கள். கடைசியாக 1440-ம் ஆண்டு திரும்பவும் அர்ச். இராயப்பர் ஆலயத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. அங்கேயே இன்றுவரையில் அது இருந்துவருவதை ரோமைநகரைத் தரிசிப்பவர்கள் பார்க்கலாம்.

திருமுகச்சாயலின் பிரதியொன்று படங்களாக அச்சிட்டு உலகெங்கும் வழங்கப்பட்டு வந்துள்ளது. சரியான சாயலில்லாத போலிப்படங்களும் பரவிவரத் தலைப்பட்டன. ஆனதுபற்றி உண்மையான சாயற்படங்களுக்கு ரோமையதிகாரிகள் முத்திரையிட்டு அனுப்புகின்றார்கள். அப்பேர்ப்பட்ட படங்கள் நம்நாட்டில் பல கோவில்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கத்தோலிக்கர்மத்தியில் திருமுகப் பக்தியும் பரவியிருக்கின்றது. நமது காலத்தில் அர்ச். குழந்தை தெரேசம்மாள் திருமுகப்பக்தியில் தேர்ந்தவள். [illegible] சில செபங்களும் இயற்றியுள்ளாளென்பது அவள் சரித்திரத்தில் காணக்கிடக்கின்றது.

யேசுவின் திருமுகப்படம் நமக்கு அவர்பட்டவாதைகளை எடுத்துக்காட்டும். பாவத்தின்கொடுமையை நமது புத்தியில்தீட்டும். நமக்கு வரும் சோதனைகளைத் தூரஓட்டும். பாவியின் இருதயத்தில் மனஸ்தாபத்தை ஊட்டும். யேசுவின் பாடுகள்மட்டிலே நல்லமனதுடையோரின் இருதயத்தில் பக்தியின்பொறியை மூட்டும்.

— *(The Catholic Register)*


## ... அமைதியான தூக்கம்




இது அற்புதமானது ... லெக்டோஜன்கொண்டு போஷிக்கப்படுவதாலே இரவில் நாங்கள் இப்போது எழும்புவதில்லை. குழந்தை அவ்வளவாகத் திருப்திப்படுகிறது. ஏனெனில், தாய்ப்பாலில் அடங்கியுள்ள முக்கியமான உணவுப்பகுதிகளை எல்லாம் அது பெற்றுக்கொள்ளுகிறது. லெக்டோஜன் அவ்வளவு இலகுவாகச் சீரணமாகியும்விடுகிறது ... அதன்வயிற்றிலே இலேசாகத் தங்கியிருக்கிறது. ஆம், எங்கெங்குமுள்ள தாய்மார் எல்லாரும் அப்படியே சொல்லுகிறார்கள். அவ்வாறுசொல்லக் காரணம், விசேஷவிதமாகத் தயாரிக்கப்பட்ட குழந்தைஉணவு இதுவாகும்... லெக்டோஜன்கொண்டு உங்கள்குழந்தையைப் போஷியுங்கள்.

# லெக்டோஜன்


உலகிலுள்ள குழந்தைகளின் உணவு.


— பிரித்தானியிலே சென்ற 1950-ம் ஆண்டில் மேலும் இரண்டாயிரம் போலிஷ்காரர் போய்க் குடியேறியிருக்கின்றனர். அதனல் தற்போது அத்தேசத்திலே மொத்தமாக இருந்துவரும் போலிஷ்காரரின்தொகை 1,62,000 போரகியிருக்கிறது. பிரித்தானியிலுள்ள கத்தோலிக்கசகோதரர்கள் ஞானவிஷயமாயும், உலகவிஷயமாயும் இவர்களுக்குக் காண்பித்துவரும் அனுதாபமும், செய்துவரும் உதவியும் பாராட்டத்தக்கனவாம்.

— "பத்தாமபத்திராதர் — வத்திக்கான் இராச்சியம்" என விலாசமிடப்பட்ட நூற்றுக்கணக்கான கடிதங்கள் உலகம்முழுவதிலுமிருந்து இன்னுமே வத்திக்கான்போய்ச் சேர்ந்தவண்ணமிருக்கின்றன. இவைகள் திறக்கப்படாமலே அர்ச். பேதுருவானவர் கல்லறைமேல் சிலதினங்களாக வைக்கப்பட்டுப் பின்னர் வாசிக்கப்படாமலே சுட்டெரிக்கப்படுகின்றன.

— சென்ற பரிசுத்தவருடத்திலே பாத்திமாநாயகியின் திருக்ஷேத்திரத்தில் பதினையாயிரம் பூசைகளுக்குமேல் நிறைவேறியிருக்கின்றன. சில தினங்களில் நாள்ஒன்றுக்கு அதிகாலை நாலுமணிமுதல் நூறுபூசைகளுக்குமேலும் நிறைவேறியிருக்கின்றன. அந்நாட்களிலே மேலதிகமாக ஐம்பதுபீடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Osram
REGD. TRADE MARK

ஒஸ்றம்
அற்புதமான லாம்பு
கொடுக்கும் விலையிலும் கூடிய பலன் உள்ளது.
வாக்கர் அன் கிறீக் லிமிட்டெட்.
கொழும்பு, கண்டி, வதுளை, டிக்கோயா, அப்புத்தளை, லின்டுலா.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 5332

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

வேலணைமேற்கு சதாசிவம்பிள்ளை மகாலிங்கம் வழக்காளி.

1. வேலணைமேற்கு முத்து கணபதி சின்னத்தம்பியும் பெண்
2. ஷை வள்ளியம்மையும்
3. வண்ணார்பண்ணைகிழக்கு சேனாதிராசாவும் பெண்
4. ஷை சிவஞானம்மாவும்

எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 5332-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 5-ந்திகதி சனிக்கிழமைமுற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1810. இதில் ரூபா 1300-க்கு 23-3-1949 தொடக்கம் 30-5-49 வரைக்கும் வருடமொன்றுக்கு ஒன்பதுவீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் 30-5-1949 தொடக்கம் கொடுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 186-68. இதில் ரூபா 125 கொடுபட்டது.

காணி விபரம்:

தீவுப்பகுதி வேலணை மேற்கிறை குஞ்சிக்கலட்டி. நிலப்பரப்பு 5 குளி $16\frac{1}{2}$. எல்லை, கிழக்கு: செல்லையாமகள் இராசலட்சுமி, வடக்கு: ஐயனார்கோவிலாதனம், மேற்கு: வேலுப்பிள்ளை தருமலிங்கம், தெற்கு: சங்கத்தார் கேணி வயிரவ கோயிலாதனம். இதடங்கலும் தெற்கெல்லைக்காணியில் இருக்கிற கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்துமதைச்சேர்ந்தவைகளும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்,
28-3-51.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

தத்துவவழக்கு. இல. 1148

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

நாரந்தனை, காலஞ்சென்ற அவுருன் லாசறுவினது ஆதனத்துக்குத் தத்துவம் மரணித்தவர்.

நாரந்தனை அவுருன் லாசறு கைம்பெண் ஆனாசி தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1148-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படுந் துண்டுக்காணிகள் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 12-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

காணிகளின் விபரம்:

1. நாரந்தனை இறை முட்டன் கலடு. நிலப்பரப்பு 22. எல்லை, கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: பிருஞ்சிப்பிள்ளை சயித்தோப்பிள்ளை, மேற்கு: சந்தியாப்பிள்ளை பெண் ஆனாயிமுத்து, தெற்கு: அவுருன் சவிரிமுத்து. இதில் சொரியலாய் அரைவாசி.

2. நாரந்தனை இறை மனுக்கன்னூரி. நிலப்பரப்பு 44. எல்லை, கிழக்கு: வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை, வடக்கு: வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளையும் பங்காளரும், மேற்கு: வெறும்நிலம், தெற்கு: நாகன் சின்னப்பொடியனும் இன்னொருவரும். இந்த எல்லைக்குட்பட்ட காணியடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 14.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்,
4-4-51.

## ஆண்டவர் சரித்திரம்

நமது அச்சியந்திரசாலையிலே விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது.

முதலாம்பாகம் பிரதி விலைசதம் 90.

இரண்டாம்பாகம் பிரதி விலைசதம் 90.

# தமிழின் பெருமை

( க. கவின்மணி )

### வெண்பா

1. மூவேந்தர் போற்றி முடிக்கணிந்தார்; பாவூறும்
நாவேந்தர் போற்றி நலம்செய்தார் — பூவேந்தர்
பல்லா யிரவர் பதம்பணிந்தார்; பைந்தமிழே!
எல்லா மொழிக்கும் இனிது.

2. சங்கம் வளர்த்த தமிழ்மொழியை ஆய்ந்தவர்கள்
தங்கம்; சரளம்; தனியமுதம் — இங்கிதற்கு
ஈடாக எம்மொழியும் இல்லை எனப்புகன்றார்
சோடாக வேறுண்டோ சொல்.

3. தெய்வத் திருத்தமிழே! சேர்ந்தார் புவிமீது
உய்ய நெறிகாட்டி ஒளிர்தமிழே — வையகத்தில்
சீரிளமை குன்றாச் செழுந்தமிழே! நின்போல
யாரிளமை பெற்றார் நவில்.

### விருத்தம்

4. பிறநாட்டு அறிஞரெல்லாம் உன்னழகு
தன்னிலே பெரிதும் சொக்கி
உறவாடிக் கனிதமிழே! இனிமொழியே!
ஒருநாளும் இளமை குன்றாத்
திறமுடையாய்! வந்தணையும் மொழிகளைநீ
தள்ளிவிடாச் செய்கை நன்று
இறவாத புகழ்பூண்டாய் என்றென்று
வாழ்த்தினர் இன்பம் துய்த்தே.

5. புலன்வென்ற முனிவோரும் மன்னவரும்
பொன்னடியே புகலென் றோர்ந்து
நிலமிசைநின் வழிநடந்து சிறப்புற்றார்;
அதனல்யாம் பெருமை பெற்றோம்;
அலர்கதிரும் நிலவுமுல குள்ளளவும்
எழில்குன்றா அன்னே! உன்னைப்
பலர்புகழ்ந்து பாடுகிறார்; ஆடுகிறார்
பழந்தமிழே! பக்தி யாலே.

## விடத்தற்தீவுத் தபால்

(கிராமத் தோண்டன்)

ஐயா! முதன்முதலாகக் கிராமத் தொண்டன் எல்லார்க்கும் அன்பின் வணக்கம் சமர்ப்பிக்கின்றான். பிற்பாடு தன்கிராமமக்கட்குப் பின்வருமாறு செய்தி விடுக்கின்றான்.

கிராமமக்களே! மறைந்தொழுகிய காலமெல்லாம் மலையேறிவிட்டது. எழுங்கள்! விழியுங்கள்! உங்கள் சுயநலப்போர்வையைக் களைந்தெறியுங்கள். உங்கள்கிராமத்திற்காக வீரத்துவமாய்உழைக்க விழித்தெழும்புங்கள்! அடிமைவாழ்க்கை எம்மைவிட்டு அகன்றுபோயிற்று. சுதந்திரதீபத்தை எம்இராசதந்திரிகள் கொளுத்திவிட்டார்கள். அத்தீபம் உங்கள்கிராமங்களிலும் பிரகாசிக்கவேண்டின் 'என் தேசம்', 'என்நாடு', 'என்கிராமம்' என்றஎண்ணம் உங்கள்மனதில் குடிகொண்டிருப்பதாக! துன்பம்வரின் தெய்வந்துணைபுரியும் என்ற பாரதியின் தூயமொழியைச் சிந்திப்பீர்களாக!

மற்றவர்களெல்லாம் என் தேசம், என்நாடு, என்கிராமம்என்ற எண்ணங்கொண்டு இடையீடின்றிஉழைத்து வெற்றிமாலை சூடுகின்றார்களெனில் உங்கள்வீரமெங்கே? ஆண்மையெங்கே? சிந்தியுங்கள்!

புதியகுரவர்: எங்கள்கிராமத்தில் சென்றசிலவருடங்களாக அயராது தொண்டாற்றிய அருங்குரவர் வண. ஜே. சிங்கராயர் சுவாமியவர்கள் எங்கிராமத்தைவிட்டு மாறிப் போய்விட்டார். அவரிடமாக வண. உக்தீன் சுவாமியவர்கள் எங்கிராமத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தனியாக உழைப்பினால் மங்கிக்கிடந்த பாடசாலை ஒன்று மலைமேலிட்ட மங்காத்தீபம் போன்று இலங்கப்போகின்றது.

சனசமூக நிலையம்: இந்நிலையம் ஒருவருடத்திற்குமுன் இங்கு ஸ்தாபிக்கப்பட்டது. இதன்உத்தியோகஸ்தர்களது அயராஉழைப்பினால் ஓர் வாசிகசாலை அமைக்கப்படலாயிற்று. வருடத்திற்கொருமுறை மாற்றிநியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்று இதன்தலைவராகத் திரு. A. இராசேந்திரமவர்கள் தொண்டாற்றி வருகின்றார். இவரது உழைப்பினால் எம்வாசிகசாலை உயர்நிலையடையுமெனக் காத்திருக்கலாம். சென்ற வருடக்காரியதரிசி திரு. P. யேசுதாசன்அவர்கள் மீண்டும் எதிர்ப்பின்றித் தெரிவுசெய்யப்பட்டார். இவரது சலியாஉழைப்பிற்கு எம்நன்றி உரியதாகுக! பொக்ஷாதிபராகத் திரு. A. விசுவாசம்அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். மூர்த்தியதலைவர் திரு. M. முடியப்பர்அவர்கட்கும் எம்நன்றி உரியதாகுக.

கிராமச்சங்கம்: மீண்டும் அங்கத்தவர்தெரிவு நடைபெறப்போகின்றது. முன் தொண்டாற்றியவர்களும், இன்னும் பலரும் போட்டியிடுகின்றனர். இத்தெரிவு இம்மாதம் 25, 26, 27வரை நடைபெறுமெனச் சொல்லப்படுகிறது.

தண்ணீர்ப் பஞ்சம்: பல மாதங்களாக மழைபெய்யாமையால் இங்குள்ள குளம்குட்டையெல்லாம் வற்றிப்போய்விட்டன. மக்கள் எவ்வளவோ கஷ்டமடைந்தார்கள். இதையிட்டு "நாட்டுத்தூதன்" முன்னொருகால் விளம்பியதுண்டு. தற்பொழுது வற்றிக்கிடந்த பள்ளம், குளம்குட்டையாவும் தண்ணீரால் தேங்கிக்கிடக்கின்றன. அதனால் பள்ளிப்பாலகர்களின் குதூகலமோ சொல்லமுடியாது. ஆயினும் கோடைகாலத்தில் எமதுமக்கள் அடையும் தண்ணீர்ப்பஞ்சத்தைநீக்க அரசாங்கம் ஆவனசெய்வதாக!

சென் மேரிஸ் கட்சியாரின் வெற்றி: எங்கிராமத்தில் "சென். மேரிஸ்கோஷ்டி" என நாமங்கொண்ட உதைபந்தாட்டக் கோஷ்டி ஒன்றுள்ளது. முன்னர் இக்கட்சி மன்னார் அர்ச். சவேரியார்கல்லூரி மாணவர் கோஷ்டியுடன் உதைபந்தாட்டம் நடத்தியதுண்டு. சென்ற 8-4-51-இல் இக்கோஷ்டி "மோணிங்ஸ்ரார்" என நாமங்கொண்ட வேறுஒரு கோஷ்டியுடன் உதைபந்தாட்டம் நடத்தி வெற்றிமாலை சூடலாயிற்று. சுபம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றும் உலக மகா யுத்தம்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

சொல்லிப்பிரலாபிக்கும் மொழிகளைக்கேட்க விழிகள் கரைகின்றன. உலகப்பொதுத்தந்தையாகிய பாப்பாண்டவரின் உள்ளம் சொல்லொணுத்துயர் அநுபவிக்கிறது. இன்னும் அதிக துன்பம்வந்தாலும் அதைச் சகிக்க அவர் சித்தமாயிருக்கிருர். நாமும் அவ்வாறே இருக்க வேண்டுமென்பது அவர் விருப்பம்.

"தேசங்கள் அழிந்தொழியும்"

அன்னையின் இக்கடைசி எச்சரிக்கை இன்னும் வள்ளிசாய் நடக்கவில்லை. ஆனல், ஒரு அணுக்குண்டு சணநேரத்தில் 50,000 மக்களைக் கபளீகரம் செய்யமுடியும். ஒருசில அணுகுண்டுகள் கணப்பொழுதில் லண்டன்போன்ற நகரங்களைப் பஸ்மீகரமாக்கிவிடும் என்று அறியவரும்பொழுது மூன்ரும் மகாயுத்தம்—அணுக்குண்டு யுத்தம்— ஒன்றுவந்தால் எவ்வளவு பயங்கரமானதாய் இருக்கும் என்பதை நிலைத்தாலே குலை நடுங்குகிறது.

"இன்னெரு உலகமகாயுத்தம் தொடங்கினல்"கருதினல்மாரின் கூட்டத்தில் பாப்பரசர் கூறினர் (23-12-1950). "அதில் உபயோகிக்கப்படும் யுத்தக்கருவிகள் உலகைப் பொட்டைக்காடாக ஆக்கிவிடும், வற்றிய பாலைநிலமாக்கிவிடும்—வெறுமைக் கோலந்தான் மிஞ்சிநிற்கும்." பாத்திமாஅன்னை முன்காட்டியே அறிவித்துள்ள பயங்கர தண்டனை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டதை நாம் அறியாமலில்லை. ஆனல், கடவுளின் கோபாக்கினையைத் தணித்து, அவருடைய பழிவாங்கும்கரத்தை இழுத்துப்பிடிக்க நமக்கு வழிவகை இல்லையா........?

நிச்சயமாய் இருக்கிறது. நினீவே மக்களின் சரித்திரம் நமக்குத் தெரியாததல்லவே!.... மீண்டும் அதை உங்களுக்குச் சொல்லுகிறேன் ஞாபகமூட்டுவதற்காக. அதைக்கேட்டு நெஞ்சாரநினைக்க இதுவே தக்க தருணம்.

........ஆண்டவனின் ஆஞ்ஞைப்பிரகாரம். ஜோனஸ் எழுந்து சென்ருர் நினீவே பட்டணத்திற்கு. மூன்று நாள் பயணம் செல்லக்கூடிய தூரத்தில் இருந்தது நினீவேநகரம். ஜோனஸ் அந்நகரத்தில் பிரவேசித்து இடிமுழக்கம் செய்தார்: 'இன்னும் நாற்பதுநாட்களில் நினீவே நகரம் அழிக்கப்படும்' என்று. நினீவேநகரமக்கள் தெய்வநம்பிக்கையுடையவர்கள். உடனே தபம்செய்யச் சித்தமானுர்கள். பெரியவரும் சிறியவரும் ஒருவர் பாக்கியில்லாமல் சாக்குத்துணிகள் அணிந்து உபவாசம் இருந்தார்கள்.

நினீவேஅரசனுக்கும் செய்தி எட்டியது. அவனும் உடனே எழுந்து தன்சிம்மாசனத்தை விட்டுஇறங்கித் தன் ஆடையைக் களைந்துவிட்டுச் சாக்குத்துணி போர்த்திச் சாம்பலில்குந்தித் தபம் இயற்றினன். அரசனும் அரசியும் பிறப்பிக்கும் உத்தரவெனக் கீழ்க்கண்டவாறு பிரகடனப்படுத்தினன் வேறு: "யாவரும் சாப்பிடாமலும் குடியாமலும் இருக்கட்டும். மக்கள்—மாக்களும்கூட — சாக்குடை தரித்துக்கொண்டு, ஆண்டவனைப்பார்த்துத் தங்கள் முழுப் பலத்தோடு முறையிடட்டும், ஒவ்வொருவரும் தங்கள் தீயவழியை விட்டு அகலட்டும், அக்கிரமங்களைக் கைவிடட்டும்."

கடவுள் கருணைக்கண் நோக்கி மன்னிப்பார்; தமது கோபத்தை அடக்கிவிடுவார்; நாம் அழியமாட்டோம் என்று யாரால் சொல்லமுடியாது....? கடவுள் கண்பார்த்தார். அவர்கள் தங்கள் தீயவழிகளைவிட்டு அகன்றுவிட்டதைக் கண்டார். அவர்களுக்கு அனுப்பவிருந்த தீயஆக்கினையை அனுப்பாது கருணைகாண்பித்தார்(ஜோனஸ். III. 3-10)

மீண்டும் கடவுள் இதுபோன்ற கருணைகாண்பிக்கச் சித்தமாயிருக்கிருர். அகிலஉலகத்திற்கும் தண்டனை ஆரம்பமாகி விட்டபோதிலும்கூட அவர்கருணைக்கு இன்னும்காலம் இருக்கிறது. அவருக்கு விரோதமாய் நடந்துகொண்டவர்களிடம் கொஞ்சமாகிலும் மனஸ்தாபஉணர்ச்சி இருக்கிறதா— ஒரு ஏக்க மூச்சு, ஒருதுளிகண்ணீர்....? (தொடரும்)

## சுதேச வர்த்தமானம்

### அங்கத்தவரின் வீரத்துவம்

வதுளையிலே நவமாக ஆக்கப்பெற்ற வரியிறுப்போர்சங்கத்தின் பகிரங்க கூட்டம்ஒன்று சென்றசனிக்கிழமை அங்கு பட்டினமண்டபத்தில் நடந்தேறியது. அதற்குக் கொழும்பு நகரின் மாஜிமேயர் டக்றர் குமரன் இரத்தினம் தலைமைவகித்தனர். இவர் அங்குள்ள கம்யூனிஸ்ததலைவர்களால் அக்கூட்டத்தில் பேசும்படியாக அழைக்கப்பட்டிருந்தார். அதனல் இவர் யு. என். பி. கட்சியின் அரசியல் நிர்வாகத்தை அதிகம்கடுமையாகத் தாக்கினர். கொழும்பிலே வீடமைப்புத்திட்டத்தைக் கொண்டுவரத் தானே காரணமெனக்கூறினர். யு. என். பி. கட்சியைச் சேர்ந்தவர்கள் தந்திர சூழ்ச்சிகொண்டு தன்னைப் பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டனரென விளம்பி, எல்லோரும் இடதுசாரிகளை ஆதரித்து யு. என். பி. அரசாங்கத்தை விழுத்திவிட வேண்டுமென மனுப் பண்ணினர். அப்போது வதுளைப் பட்டினசங்கத்தில் ஓர்அங்கத்தவரான திரு. ஏ. கே. முருகேசுஅவர்கள் உத்தண்டத்துடன்எழுந்து அங்கு மண்டபத்தில் குழுமியிருந்தாரையெல்லாம் நோக்கி, கம்யூனிஸ்தகட்சியில் சேர விரும்புகிறவர்கள் கைகளை உயர்த்துங்கள் பார்ப்போமென்றுகேட்டார். ஒருவர்தானும் கைஉயர்த்தவில்லை. அப்போது சில சமசமாஜிகள் கூட்டத்தில் பேசவிரும்பினுர்கள். ஆனல், அனுமதிக்கப்படவில்லை. பின்னர் கூட்டத்தை முன்னின்றுநடத்திய பத்துப் பன்னிரண்டுபேர்தவிர ஏனையோரெல்லாம் கூட்டமாக மண்டபத்தைவிட்டு வெளியேறினுர்கள்.

### பிரதிநிதியின் பிரலாபம்

கமத்தொழில்மந்திரியாரான திரு. டட்லி சேனுநாயகஅவர்கள் சமூகமாகச் சென்ற 11-ந் திகதியன்று வறியப்போலாவிலுள்ள கோபெகேன் பாடசாலையில் கிராமவாசிகளின் குறைமுறைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக நடந்தகூட்டமொன்றிலே குருநாகற் பகுதியைச்சேர்ந்த பலதோருக்கோறளை, தெவமேடிகோறளை என்பனவற்றில்அடங்கிய கிராமவாசிகளின் மனமிரங்கத்தக்கநிலைமைகளை வறியப்போலாப் பிரதிநிதியான திரு. ஈவான் தசனுயக எடுத்துக்காட்டியபோது ஓர் குழந்தைப்பிள்ளையைப்போல் அழலாயினர். அப்பகுதியிலுள்ள சனங்களெல்லாம் கமத்தொழிலைநம்பிச் சீவிக்கிறவர்கள்என்றும், மழைபெய்து கொடாமையாலே பயிர்கள் சேதம் அடைய, அவர்கள்முழுப்பேரும் பட்டினியால் வருந்த வேண்டியிருக்கிருர்கள்என்றும அவர்கூறலாயினர்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ் சபை

இச்சபையின் மாதாந்தகூட்டம் இந்தமாதம் 27-ந்தேதி வழமையான நேரத்திலும், நாளிலும், இடத்திலும் நடைபெறும். அந்நேரம் சிலசகோதரர்கள் தமது நவாப்பியாசகாலத்தை முடிப்பார்கள். சிலர் ஆரம்பிப்பார்கள். வைகாசிமாதம் பரிபூரணபலன் அடையக்கூடிய நாட்கள்: 13, 17, 18, 19, 20(2), 21, 24, 30, 31. பொதுப் பாவமன்னிப்பு 13-ம், 20-ம், 24-ம் தேதிகளில் இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

Mal. No. 482. Eng.

## சுண்டெலிகளும் மலேரியா ஆராய்ச்சியும்

ஒன்றின்சீவசத்தை மற்ரென்றிற் செலுத்துவதில் கீர்த்திவாய்ந்த அமெரிக்கநிபுணரான டக்றர் கிளேயர் ஜி. ஹவ்அவர்களுக்கு 1948-ம்ஆண்டு ஆடிமாதம் பெரியதோர்ஆச்சரியத்தைக் கொண்டுவரலாயிற்று. யானைமூஞ்சூறுஎன அறியப்படுகின்ற ரோமமுள்ள ஓர்தொகையான நூதனபிராணிகளை அவர்பெற்றுக்கொண்டார். டக்றர் ஹவ்அவர்கள் தமதுமலேரியா ஆராய்ச்சிகளில் உபயோகிக்குமாறு இந்தச்சிறிய பிராணிகளை இருபது வருடகாலமாகத் தேவைப்பட்டுக்கொண்டிருந்தார். இவைகள் பிரித்தானிய—எகிப்திய சூடானிலிருந்து ஆராய்ச்சிக்கோஷ்டிஒன்ருல் கொண்டுவரப்பட்டுப் பின்னர் திரிப்போலித்தானியாவிலிருந்து விசேஷ ஆகாய விமானம்ஒன்றில் அமெரிக்கஐக்கிய தேசம் கொண்டுபோய்ச் சேர்க்கப்படலாயின.

(தங்கள்பெயரிலிருந்தே) நீண்ட மூஞ்சியைக்கொண்ட இந்தப்பிராணிகள் மூன்று அங்குல நீளமுள்ளனவாய் அரை அங்குலஉயரத்தில் எழுந்துநிற்கின்றன. அதிகம்நீண்ட ஓர்வாலைக் கொண்டிருக்கின்றன. இவைகள் வழமைக்குமாருன பலமுள்ளனவாய்இருப்பதுடன் நித்திரைபோலும் பிரமையான நிலைமையிலும் உணர்ச்சியுள்ளனவாயும் இ"க்கின்றன. இது ரசாயன பாகசாலைவேலைக்கு வழமைக்குமாருக அதிகம்வாய்ப்புடையனவாய் அவைகளைச் செய்துவிடுகின்றன. தங்கள் இயற்கையானநிலைமையிலே அவைகள் வெட்டுக்கிளிகளையும், அவைகளைப் போன்ற பூச்சிபுழுக்களையும் தின்று உயிர்வாழுகின்றன. ஆனல், ரசாயன பாகசாலையிலோ அவித்த கடினமான முட்டைகளை, கஞ்சியையும், சாதத்தையும், பால் முட்டை சீனிசேர்த்துச் சுட்ட பணிகாரத்தையும்தின்று சீவிக்கின்றன. அவைகளைப் பராமரிப்போர் சிறுதுளிகளாகச்செலுத்தும் குழாய்க் கருவிமூலம் வற்றக்காய்ச்சிய பால் கொண்டுதானும் அவைகளைப் போஷிக்க முயலுகின்ருர்கள். இவற்றிலே முதலில் பிடிக்கப்பட்ட 87 பிராணிகளில் 80 பிராணிகளும் திறமையற்றவிதமான பராமரிப்பாலே இறந்துபோனதிலிருந்து இந்தப்பிராணிகள் மட்டில் ஒருவர் எவ்வளவுசாக்கிரதையாய் நடந்துகொள்ள வேண்டுமென்பது தெளிவாகின்றது.

பிந்தப் புதிதாக ஒருபெருந்தொகையாய் இவைகள் பிடிக்கப்பட்டன. இந்த மூஞ்சூறுகளில்அரைவாசி மலேரியாவால் வருந்திக்கொண்டிருப்பதை ஆராய்ச்சி காணபித்தது. உலகமுழுவதிலும் அதிகம்நெடுங்காலமாக மலேரியாபற்றியஆராய்ச்சி வைத்தியசங்கத்தின்கருத்தை ஈர்ந்து வந்திருக்கிறது. அயனுந்தசுகாத்தியங்களிலே எங்கெங்கும் பரந்துகொண்டுவருவதும், வருடத்துக்குவருடம் லட்சக்கணக்கானேரைப் பலியெடுப்பதுமான இந்தப்பயங்கரநோயை எதிர்த்துப்போராடுதற்குச் சித்திகரமான முறைகளைக் கண்டறிவதற்காகக் குன்ருதஊக்கத்துடன் ஆராய்ச்சிசெய்யப்பட்டிருக்கிறது.

இதுவிஷயமாய்ச் செய்யப்பட்டுள்ள பிரமாதமானவேலை, முந்திய சர்வதேச சங்கத்தினல் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியால் செய்யப்பட்டவேலையாகும். அது 1938-ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலே, மலேரியாக்காலத்தில் தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவிப்பதானது, அதுவராமல் தடுப்பதற்கான ஓர் சித்திகரமான பாதுகாப்பாகுமென விதித்திருக்கிறது. மேலும் மலேரியா ஓர்கால் பிடிக்குமிடத்து 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் அருந்துவது சிறந்த மாற்றுமருந்தாகுமென ஆலோசனை கூறியிருக்கிறது.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 6290

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

1. காம்பன், (இப்போ கொழும்பு) ரி. விசுவலிங்கமும் பெண்
2. ஷை இராசலட்சுமியும்

வழக்காளிகள்.

சரவணை இலங்கைநாதர் பாலசுப்பிரமணியம் எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 6290-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1951-ம் ஆண்டு வைகாசிமாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1155. இதில் ரூபா 875-க்கு 12-1-50 தொடக்கம் 26-5-50 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்குப் பன்னிரண்டு வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் 26-5-50 தொடக்கம் கொடுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 190-65.

காணிகளின் விபரம்:

1. ஊர்காவற்றுறை கோயிற்பற்று சரவணை இறை பீக்குளிவயல் கேணிக்கரை வெள்ளடை கேணிக்கரை தெற்குக் கலட்டியும், இயங்கன்கலடும். நெற்பரப்பு $18\frac{3}{4}$. எல்லை, கிழக்கு: பளனி நாகனுதரின் உரிமைக்காரரும் பங்காளரும், வடக்கு: பளனி நாகனுதர்பெண் சுந்தரி அம்மாவும் பங்காளரும், மேற்கு: கேணியும் நாகலிங்கம் லைம்பெண் சிவபாக்கியமும், தெற்கு: முத்து கந்தையா. இதடங்கலிற் சொரியலாய்அரைவாசி.

2. சரவணைஇறை யாளிவரவையும், யாளிவரவைக்கலடும். நெற்பரப்பு 10-ம், கிணற்றில் அரைவாசியும், தென்னைகள், பனைகள், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை,கிழக்கு:வாய்க்காலும் காசிப்பிள்ளை சுப்பிரமணியமும், வடக்கு: வேலுப் பிள்ளை பெண் சின்னத்தங்கம், மேற்கு: காசிப்பிள்ளை மகள் முத்தாச்சி, தெற்கு: வயித்திலிங்கம்பெண் தங்கம்மாவின் உரிமைக்காரர். இதடங்கலும் வேலுப்பிள்ளை சின்னத்தங்கத்துக்குரிய வடக்கெல்லையில் இருக்கிற, கிழக்கெல்லைப்பக்கமாக இக்காணியில் இருந்து வடக்குஒழுங்கைக்குப் போக்குவரவுசெய்யும் நாலுமுழ அகலங் கொண்டஒழுங்கையும்.

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்.

காரைநகர்,
4-4-51.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 30, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 19 1951.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org